பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

88 A/L
WEEKEND CLASSES
BOTANY
ஆசிரியர் : திரு குகாதரன்
சூழலியல்
ஆரம்பம் : 02-04-88
Saturday 1-30 p.m-2.30P m
பிறப்புரிமையியல்
ஆரம்பம்: 01-04-88
Fri. 10 30 a.m 12.30 P.m.
New Master Institute
241, Navalar Road,
Jaffna.

# உதயன்

உண்மை – அஞ்சாமை – நடுநிலைமை

விலை
ரூ. 1-50

88 A/L
PaperClass
(Sat & Sun)
9. 30 – Botany
10. 30 – Zoology
11. 30 – Chemistry
12. 30 – Physics
நடைபெறுகின்றது.
New Master
INSTITUTE
241, Navalar Road, Jaffna

சுடர்: 3 யாழ்ப்பாணம் பிரபவ ஆண்டு பங்குனி மீ 24 உ புதன்கிழமை ஹிஜ்ரி 1408 ஷஃபான் பிறை 18 (06 04 - 1988) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:47

# தமிழகமிருந்து வந்தனர் யாழ்ப்பாண அகதிகள்

## 486 பேரும் இன்று தமது சொந்த ஊர்களுக்கு

— அலுவலகச் செய்தியாளர்கள்: அகில்ராஜ் சுபேரஷ்குமார்
காங்கேசன் செய்தியாளர்: எஸ். ஆர் ஞானசுந்தரம் —

யாழ்ப்பாணம், ஏப்ரல் 6

வன்செயல்களால் பாதிக்கப்பட்டு, தமிழகத்துக்குத் தஞ்சம் கோரிச் சென்ற அகதிகளில் யாழ்ப்பாண மாவட்டத்தைச் சேர்ந்த 486 பேர்கள் நேற்று தமது சொந்த மண்ணுக்குத் திரும்பினர். இவர்களே இங்கு வந்து சேரும் முதற் தொகுதியினராவர்.

இராமானுஜம் கப்பலில் நேற்றுப் பிற்பகல் காங்கேசன் வந்து சேர்ந்த அவர்கள், இலங்கை அரசின் சிவில், இராணுவ அதிகாரிகள், இந்திய அமைதிப்படை உயர் அதிகாரிகள், ஐ. நா. அகதிகள் விவகார அதிகாரிகள் ஆகியோரால் வரவேற்கப்பட்டனர்.

அகதிகள் தமது தாயக மண்ணில் காலடி எடுத்து வைத்த வேளை, அவர்களை வரவேற்பது போல கடும்மழையும் சடுதியாய்ப் பொழிந்தது.

இப்போது காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி தற்காலிக முகாமில் தங்கி இருக்கும் இவர்கள் 486 பேர்களும், இன்று அவரவர் சொந்த ஊர்களுக்கு பஸ்களில் அனுப்பி வைக்கப்படுவர்

நேற்று வந்த இராமானுஜக் கப்பலில் யாழ்ப்பாணம், நல்லூர், பருத்தித்துறை, அல்வாய், கிளிநொச்சி, அச்சுவேலி, வல்வெட்டித்துறை ஆகிய இடங்களைச் சேர்ந்த 486 பேர் வந்து சேர்ந்தனர்.

காலை ஐந்து மணி அளவில் இராமேஸ்வரம் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட இக் கப்பல் நண்பகல் 1 55 மணியளவில் காங்கேசன் துறையை வந்தடைந்தது.

இந்தியஅமைதிப்படையினரால் காங்கேசனில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட இறங்குதுறையில் அகதிகள் அனைவரும் இறக்கப்பட்டனர்.

கப்பல் துறைமுகத்தை அண்மித்துக் கொண்டிருக்கும் பொழுது இந்திய அமைதிப் படையினரின் ஜெயபேரிகை முழங்க இலங்கை, இந்தியா, ஐக்கிய நாடுகள் சபை ஆகிய பற்றிய கொடிகள் ஆந்திய அமைதிப் படையினரால் பறக்கவிடப்பட்டன.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது இந்திய அமைதிப்படையின் உயரதிகாரிகளும், இந்திய செஞ்சிலுவைச் சங்க பிரமுகர்களும்

அகதிகள் புனர்வாழ்வு அமைச்சின் மேலதிக செயலாளர் திரு. எஸ். யோகநாதன், யாழ். அரச அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம், மேலதிக அரச அதிபர் திரு ஏ. இராமநாதன், வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர், அலுவலக நிர்வாக உத்தியோகஸ்தர் திரு பி இராசையா, முகாம் பொறுப்பாளர் திரு மு. கனகநாயகம் ஆகியோரும் வரவேற்றனர்.

அகதிகளை பராமரிக்கும் முறைகளை இந்திய அமைதிப்படைக் கொமாண்டர் திரு. அப்துல்

[6 ஆம் பக்கம் பார்க்க]

### மீண்டும் இன்று வருகிறது இராமானுஜம்

யாழ்ப்பாணம், ஏப். 6

இன்று மீண்டும் "இராமானுஜம்" அகதிகளை ஏற்றிக்கொண்டு காங்கேசன் துறைக்கு வருகிறது.

நேற்றைய தினம் அகதிகளுடன் இங்கு வந்த 'இராமானுஜம்' நேற்று மாலையே இராமேஸ்வரம் திரும்பிச் சென்றது. (ஒ-10-9)

### ரூபா 25 ஆயிரமும் பணமாக இல்லை!

யாழ்ப்பாணம், ஏப். 5

சொந்த இடங்களுக்கு அனுப்பப்படும் அகதிகளுக்கு உதவித்தொகை 25 ஆயிரம் ரூபாவும் பணமாக வழங்கப்படமாட்டாது.

முதற் கட்டமாக இரண்டாயிரம் ரூபா பணமும், இரண்டாம் கட்டமாக இரண்டாயிரம் ரூபா பணமும் முதலில் வழங்கப்படும்.

மிகுதிப் பணத்தின் மூலம் வீடிழந்தவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும்.

சொந்த இடங்களுக்குச் செல்லும் அகதிகளுக்கு வழங்கப்படும் ஆறுமாத கால உணவுப் பொருள்களுக்கான பெறுமதியும் இப் பணத்தில் இருந்தே அறவிடப்படும்.

இத் தகவல்களை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-9-10)

### கப்பலும் வர கடும் மழையும் வந்தது!

யாழ்ப்பாணம், ஏப். 6

இராமேஸ்வரத்தில் இருந்து அகதிகளுடன் புறப்பட்ட இராமானுஜம் கப்பல் காங்கேசன் துறைமுகத்தை வந்து சேர்ந்த வேளை பார்த்துத் திடீரெனக் கடும் மழையும் பெய்ய ஆரம்பித்தது.

அகதிகள் கப்பலில் இருந்து இறங்கிய பொழுது இன்னும் மழை கடுமையாகி "சோ" வெனப் பொழியத் தொடங்கியது.

கப்பலில் வந்த அனைவரும் மழையில் நனைந்தபடியே அவர்களுக்காக காத்திருந்த பஸ்களில் ஏறினர்.

அகதிகளை வரவேற்க வந்த அதிகாரிகளும்

(6ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா. அதிகாரிகள் குழு அகதிகளைக் கவனிக்கும்

யாழ்ப்பாணம், ஏப். 6

தமிழ்நாட்டில் இருந்து லங்கை திரும்பும் அகதிகளைப் பொறுப்பேற்று அவர்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் குழு மேற்கொள்ளும்.

மன்னாரில் வந்து சேர்ந்த அகதிகளையும் இக் குழுவே பொறுப்பேற்று அவர்களுக்கான சகல நிவாரண உதவிகளையும் வழங்கியது.

அகதிகளை பொறுப்பேற்பதில் இருந்து அவர்களை மீளக் குடியமர்த்தும்வரையுள்ள சகல செலவுகளையும் ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் குழுவே பொறுப்பேற்கும்.

யாழ்ப்பாணத்தில் மேற்படி குழுவுக்கான அலுவலகம் ஒன்றும் வெகு விரைவில் திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-9-10)

### அடையாளக் கார்ட்டும் வைத்திய பரிசோதனையும்

இலங்கை திரும்பிய அகதிகளுக்கு நடேஸ்வராக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் வைத்திய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இலங்கை இராணுவத்தினால் தற்காலிக அடையாளக் கார்ட்டும் அவர்களுக்கு வழங்கப்பட்டது.

அகதிகள் அனைவரும் நடேஸ்வராக் கல்லூரி முகாமிற்கு அழைத்து வரப்பட்டு அங்கு குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினரால் பதிவு செய்யப்பட்டனர்.

பின்னர் சுங்கத்திணைக்கள அதிகாரிகளினால் அவர்களது பொதிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

யாழ். சுகாதார சேவைத் திணைக்களத்தினரால் வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன் — சிறுவர்களுக்கு சின்னமுத்து, போலியோ என்பவற்றிற்கான தடுப்பூசிகளும் போடப்பட்டன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் இரண்டாயிரம் ரூபா ரொக்கமும், உணவு, உடை அடங்கிய பார்சல் ஒன்றும் வழங்கப்பட்டது. (ஒ-10-9)

3 நாட்களுக்கு முன்னரே அறிவிப்பு

### சொந்த மண்ணில் வாழ வசதி செய்யப்பட்டுள்ளதாகக் கூறியே திருப்பி அனுப்பினர்

யாழ்ப்பாணம், ஏப் 7

வடபகுதியில் அமைதி ஏற்பட்டுவிட்டது நீங்கள் அங்கே போய் உங்கள் சொந்த மண்ணில் வாழ வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்தே இந்திய உயரதிகாரிகள்

#### வந்தவர் கூறுகிறார்

—அலுவலகச் செய்தியாளர், அகில்ராஜ்—

எம்மை யாழ்ப்பாணம் அனுப்பி வைத்தனர்.

இராமானுஜத்தில் நேற்று யாழ்ப்பாணம் திரும்பியவர்களில் ஒருவரான பருத்தித்துறையைச் சேர்ந்த எஸ் தம்பிராசா என்பவர் உதயன் செய்தியாளரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமராட்சியில் நடைபெற்றஅசம்பாவிதங்கள் காரணமாக தமிழ்நாட்டுக்கு இடம்பெயர்ந்து சென்ற தம்பிராசா நேற்று காங்கேசன் துறையில் வைத்து மேலும் தெரிவித்ததாவது:

வடமராட்சியில் ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதல் காரணமாகவே நான் வடமராட்சியை விட்டு வெளியேறி, வள்ளம் மூலமாக இராமேஸ்வரம் போய்ச் சேர்ந்தேன்.

பின்னர் மண்டபம் முகாமில் பதிவு செய்து கொண்டு அங்கு தங்கினேன்.

எம்மை யாழ்ப்பாணம் அனுப்பப்போவதாகக் கடந்த மூன்று நாட்களுக்கு முன்னர்தான் தெரிவித்தனர்.

இதனையடுத்து எவரும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

#### சுபநேரம்

6 - 4 - 1988
பங்குனி 24
புதன்கிழமை
சுபநேரம்:
4 38 முதல் 6.08 வரை
ராகுகாலம்:
12 08 முதல் 1 38 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

முச்சந்தி முரளி



கப்பல் வந்தது, அகதிகள் வந்தினம், ரயில் வந்தது, மழையும் வந்தது. எல்லாம் ஒரே நாளில் என்ன அறிகுறிகோ...?

### திருமலையில் தமிழரைத் தாக்கும் ஸ்ரீலங்கா இராணுவம்

திருகோணமலை, ஏப் 6

திருகோணமலை மட்கோவ் இறங்குதுறையில் இருந்து கடமை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த ஊழியர்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினர் தாக்கியதாகக் கூறப்படுகிறது.

மட்கோவ் பகுதியில் அமைந்துள்ள முகாமைச் சேர்ந்த சிப்பாய்களே இத்தாக்குதலை நடத்தினர் எனக் கூறப்படுகிறது

துறைமுக ஊழியர்களை சிப்பாய்கள் கண்டபடி தாக்கியது மட்டுமன்றி அவர்களைக் கடும் பயமுறுத்தல் வார்த்தைகளால் மிரட்டியதாகவும் தெரியவருகிறது.

இச்சம்பவத்தையடுத்து ஊழியர்கள் ஊர்வலமாகச் சென்று இந்திய அமைதிப்படையினரிடம் முறையிட்டதுடன் மகஜர் ஒன்றையும்கையளித்தனர்.

இதையடுத்து அன்றையதினமே லிங்க நகரில் இந்திய அமைதிப் படையினர் முகாம் ஒன்றை அமைத்து, அப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டனர். [ஒ150]

### குருநகர் மீனவர்கள் விடுவிப்பு

குருநகர், ஏப். 6

தடைசெய்யப் பட்ட நேரத்தில் மீன் பிடித்த போது இந்திய அமைதிப் படையினரிடம் பிடிபட்ட குருநகர் மீனவர்கள் மூவரும் நேற்றுக் காலை விடுவிக்கப்பட்டனர். (ஒ 51)

### எரிபொருளுடன் நேற்று வந்தது ரயில்!

யாழ்ப்பாணம், ஏப் 6

நீண்ட நாட்களின் பின்னர் எரிபொருள்களுடன் ரயில் ஒன்று நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது

பிரஸ்தாப ரயிலில் 45,000 லீற்றர் மண்ணெண்ணெயும். 45,000 லீற். டீசலும் கொண்டுவரப்பட்டன.

இந்த ரயிலில் பெற்ரோல் கொண்டுவரப்படவில்லை.

யாழ் பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தில் உள்ள பெற்ரோல் தேக்கி வைக்கும் கொள்கலன் பழுதடைந்ததனாலேயே பெற்ரோல் இங்கு கொண்டுவரப்படவில்லை என அறியவருகிறது

நேற்றுக் கொண்டு வரப்பட்ட டீசல் மண்ணெண்ணெய் ஆகியவை இங்குள்ள தேக்கி வைக்கும் கொள்கலன்களில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

அவை இரண்டொரு தினங்களில் எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு வழங்கப்படும்.

இதே வேளை கிளிநொச்சியில் உள்ள பெற்ரோலியக் கூட்டுத்தாபனத்தில் இருந்து பவுஸர்கள் மூலம் பெற்ரோல் இங்கு கொண்டு வரப்படும் என்றும் அறியவந்தது. (ஒ-க)

### கிளிநொச்சி வழமைக்குத் திரும்பியது

கிளிநொச்சிப் பகுதி நேற்றுவழமைக்குத்திரும்பியது.

கடந்த வாரம் கிளிநொச்சியில் மூன்று இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அங்கு ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டுவந்தது (ஒ-10)

கிழக்கு மாகாணத்தின்

### 5 முஸ்லிம எம். பி.க்களையும் ராஜினாமாச் செய்ய வலியுறுத்து

கொழும்பு, ஏப் 6

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து முஸ்லிம் எம் பி களையும் ராஜினாமாச் செய்யும்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் கடந்த வார இறுதியில் நடைபெற்ற முஸ்லிம் அமைப்புகளின் கூட்டம் ஒன்றில் இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டதாக ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் தனது அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

மாநாட்டுப் பேச்சாளர் இதுபற்றித் தகவல் தருகையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சுமார் 4½ லட்சம் முஸ்லிம்களைத் தாக்குதல்களில் இருந்து காப்பாற்ற இலங்கை, இந்தியப் படைகள் தவறிவிட்டன என்று குற்றஞ் சாட்டியதாகவும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (அ-எ)

### தமிழ்நாட்டில் சட்டசபைத் தேர்தல் ஜூனில்

புதுடில்லி, ஏப்.5

தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதத்தில் நடத்தத் தேவையான ஆயத்த வேலைகள் ஆரம்பமாகிவிட்டன.

உள்துறை அமைச்சர் பூட்டாசிங் இத் தகவலை ராஜ்ய சபைக் கூட்டத்தில் வெளியிட்டார்

எவ்வளவு விரைவில் தேர்தலை நடத்த முடியுமோ அவ்வளவு விரைவாக தேர்தல் நடத்தப்படும்.

தேர்தல் திகதியை தேர்தல் ஆணையாளரே தீர்மானிப்பார்.

இப்படி உள்துறை அமைச்சர் தெரிவித்தார். (ஒ-எ)

### சிலாவத்துறையில் நிலக்கண்ணி வெடிக்கு 4 சிப்பாய்கள் பலி!

போராளிகள் நடத்திய நிலக்கண்ணித் தாக்குதலில் நான்கு இலங்கை இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர். இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தத் தாக்குதல் மன்னார், சிலாவத்துறையில் நேற்றுக் காலையில் இடம் பெற்றது.

அரச முந்திரிகைத் திட்டப் பிரதேசத்துக்கு அருகில் வைத்து இத் தாக்குதல் இடம் பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

### ரெலோ முக்கியஸ்தர் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், ஏப் 6

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கியஸ்தர்களில் ஒருவரான திரு செல்வக்குமார் கடந்த திங்கட்கிழமை இரவு சுட்டுக் கொலைசெய்யப்பட்டார்.

நேற்று முன் தினம் இரவு சுமார் 8-45 மணியளவில் இச்சம்பவம் நடைபெற்றதாக அறி

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ★★★ சின்னஞ் சிறு விளம்பரம் ★★★

## விற்பனைக்கு

யமாா 50 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு பொ சிவபாதலிங்கம் No. 9 அரசடி ஒழுங்கை தட்டாதெரு, யாழ்ப்பாணம். (2732)

சிவாஸ் மல்ரி சொப்பிங் சென்ரர் - நல்ல நிலையிலுள்ள தையல் மெசின்களை நியாயமான விலையில் பெறவும் தையல் மெசின்களை முதுபார்க்கவும், உதிரிப் பாகங்களைப் பெறவும் மற்றும் றெடிமேற் ஆடைகளுக்கும் சிறந்த ஸ்தாபனம் சிவாஸ், மல்ரி சொப்பிங் சென்ரர், மருதடிப் பிள்ளையார் கோவிலடி, மானிப்பாய் [2434]

யாழ் மக்களுக்குஅரிய சந்தர்ப்பம் தவற விடாதீர்கள். புதுவருடமலிவு விற்பனை (2-4-88 - 11-4-88) வரைShirt, Blouses, Frocks, Baby Frocks மற்றும் நவீன ரெடிமேட்ஆடைகள். Fashion Garments. 227 Navalar Road, Jaffna [பெருமாள் கோவில் அருகில்] [2417]

பிரம்படி வீதி, பிரம்படி கொக்குவில் - நிலப்பரப்பு 5 குளி 13 65 விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர்க்கு பகுதியாகவோ முழுதாகவோ கொடுக்கலாம் கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: தி அமரசிங்கம் 225, சபாபதி வீதி, தலையாழி கொக்குவில். [2411]

அரிய விலை உபகரணங்கள் [1] றஸ்ரன் 26 HP என்ஜின், [2] No 1 ஹவலா Fan பெட்டியுடன் [3] 15 HPமோட்டர், [4] இங்கிலிஸ் கிறைண்டர் No 10 நல்லநிலையிலுண்டுதனித்தும் விற்கப்படும். செ. சிவானந்தராசா தண்ணிரூற்று, முள்ளியவளை. [2733]

## தேவை

கோழிப் பண்ணையையும் முந்திரிகைத் தோட்டத்தையும் பராமரிப்பதற்கு வேலையாட்கள் தேவை, தொடர்பு: சிமாட்டி 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (2433)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயத்திற்கும் ஓராம் கட்டைக்கும் இடைப்பட்ட மெயின் வீதியிலோ அல்லது அருகாமையிலோ வீடு கட்டுவதற்கு ஏற்ற காணி தேவை C/o 124, உதயன்

பெண்களின் ஆடைகள் புதுப்புது டிசைன்களில் வெட்டித் தைக்கக் தெரிந்த பெண் பிள்ளைகள் தேவை நேரில் வரவு திறமைக்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும். தனலட்சுமி 25 நவீன சந்தை மேல்மாடி யாழ்ப்பாணம். (2405)

மானிப்பாய் சிற்றி பார்மஸிக்கு உடன்வைத்திய ஆய்வுகூடப் பரிசோதகர் தேவை. இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். முன் அனுபவத்துடன் நற்சாட்சிப பத்திரத்துடனும் நேரில் சமுகம் தரவும். முகாமையாளர் சிற்றி பார்மஸி. 2401)

[1] சமையல் பகுதியை பொறுப்பேற்று நடத்தக் கூடியவர் தேவை வயதெல்லை 30 க்கு மேல் [இருபாலரும் விண்ணப்பிக்கவும்] [2] பிள்ளைகளை பராமரிக்கக் கூடியவர் தேவை வயதெல்லை - 30 க்குமேல் [இருபாலரும் விண்ணப்பிக்கவும்]

## தேவை

திருமண வைபவங்களுக்கான சேலைகள், சிற்றுண்டிகள், குளிர்பானங்கள் ஆகியன ஓடருக்குப் பெற்றுக்கொள்ளலாம் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 47, கோயில் வீதி, யாழ்ப்பாணம். [2691]

## மணமகள் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த பெற்றோர் U K. இல் பொறியியலாளராக தொழில் புரியும் (B. Sc Engineer) 4 ஆம் வீட்டில் செவ் ராய் இருக்கும் மணமனுக்கு U K யில் அல்லது கனடாவில் தற்சமயம் இருக்கும் மணமகளை தேடுகின்றவர் முழு விபரங்களுக்கும் விண்ணப்பிக்கவும்: C/o உதயன் 125, யாழ்ப்பாணம். (2416)

## சேவை

30 வயது கொண்ட மதகரு ஒருவருக்கு 22 வயதுக்கு மேற்பட்ட மணமகள் தேவை. பெண் முக்கியர் இனத்தைச் சேர்ந்தவராய் இருத்தல் வேண்டும். தொடர்வு: புதுவாழ்வு நிலையம், கூளாவடி, ஆனைக் கோட்டை.

## TYPEWRITER

தட்டச்சு இயந்திரங்கள் சிறந்த முறையில் திருத்திக் கொடுக்கப்படும். மற்றும் வாங்கவும் — விற்கவும் Fudo Enterprises, 39 / 17, 3rd Lane, Power House Road, Jaffna. (Near Samy & Co.) (1803)

## சலுகை

குயின்ஸ்ரார் வழங்கும் புத்தாண்டு சலுகை 20% சழிவு உங்கள் கலர் பிலிம் சுருள்களை கழுவி பிரிண்டிங் செய்துகொள்ளுங்கள்; 163, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (2415)

## ரேனியோ போட்டோ ஸ்ரற்

தரம் நாடுவோர் தவறாது நாடுமிடம் 'கிளீன் கட்'' தெளிவான போட்டோ ஸ்ரற் பிரதிகளையும் தரமான ரேனியோ பிரதிகளையும் தமிழ். ஆங்கில ரைப்பிங் வேலைகளையும் விரைவாகப் பெற்றுக்கொள்ள 'கிளீன் கட்'' 239, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்'

## காணவில்லை

கலைமதி ஆறுமுகம் என்பவருடைய 596410243 V தேசிய அடையாள அட்டை யாழ் பஸ் நிலையத்தில் தொலைந்து விட்டது கண்டெடுத்தவர்கள் டஸ் நிலையம் முன்பாக உள்ள டரீஸ் மாட்ஸ் யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சேர்ப்பிக்கவும்; சன்மானம் வழங்கப்படும். அல்லது 71/6. அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலும் சோப்பிக்கலாம். (2428)

8 4-88 அன்று நாவற்குழி அமைதிப்படை முகாமிற்கும் நாவற்குழி சங்கக்கடைக்கும் இடையில் தேசிய அடையாள அட்டை, உத்தியோக அடையாள அட்டை. சாரதி லைசென்ஸ், இன்சூரன்ஸ், ரக்ஸ் (வரி., மோட்டார் சைக்கிள் அனுமதிப் பத்திரம் ஆகியனவற்றை தொலைத்துவிட்டேன். கண்டு எடுத்தவர்கள் நாவற்குழி சங்கக்கடையில் ஒப்படைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (2420)

திரு. தாமோதரம் புலேந்திரன் என்பவரை 1-4-88 வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை. இவரைப்பற்றிய தகவல்கள் அறிந்தவர்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும் தா. விஜயரெட்னம் இலங்கை மின்சாரசபை, ஆசுக வேலைப் பகுதி. சுன்னாகம். (2410)

## கோழிக்குஞ்சு விநியோகம்

புரொயிலர் குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விநியோகிக்கப்படும். முன்கூட்டியே பதிவு செய்க சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில் (2382)

## வாந்திபேதி கருத்தரங்கு

மகாடிகாமம், ஏப் 6 வாந்திபேதியும் அதைத் தடை செய்யும் முறைகளும் என்ற பொருள் பற்றி மொடிகாமம் திருநாவுக்கரசு கொத்தணி மகா வித்தியாலயத்தில் டாக்டர்கள் பங்கு கொண்டு கருத்தரங்கு ஒன்றை நடத்தினர்.

கொத்தணி அதிபர் திரு. ச. சின்னத்தம்பி தலைமையில் கொத்தணியில் அடங்கிய பதினொரு பாடசாலைகளின் அதிபர்கள் விஞ்ஞான ஆசிரியர்கள் இதில் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே. நடராஜா சாவகச்சேரிபிரதமர்வைத்திய அதிகாரி டாக்டர் ரி. சோமசுந்தரம் யாழ் சுகாதார கல்வி அதிகாரி திரு எஸ் வைத்தீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர்.

## புலமைப் பரிசில் வழங்கும் வைபவம்

சாவகச்சேரி, ஏப 6 வன்செயலால் பாதிக்கப்பட்ட குடும்பத்தலைவர்களை இழந்த பிள்ளைகளுக்கான புலமைப்பரிசில வழங்கும வைபவம் அறவழிப பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

அறவழிப்போராட்டக் குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்ச்சியில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு பூ. சுந்தரம்பிள்ளை சிறப்பு வருந்தினராகக் கலந்து கொண்டார்.

திரு. வி. எஸ். துரைராசா தலைமையில், ஆரம்பமான இந் நிகழ்ச்சியில சிறப்பு வருந்தினரின் பாரியார் திருமதி சுந்தரயம்மா பரிசில்களை வழங்கினார்.

குடாநாட்டின் பல பாகங்களிலும் இருந்து தெரிவு செய்யப்பட்ட 85 பிள்ளைகள புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொண்டனர். (ஆ-31,

## S. T. C. A. Certificate

பரவலாக அங்கீகரிக்கப்பட்டு வருவதற்கு காரணங்கள்-

1. 22 வருடங்களாக இயங்கிவரும் கல்வி நிறுவனம்.
2. அரசாங்கத்தாலும், யாழ் மாநகர சபையாலும் பதிவு செய்யப்பட்டது
3. லண்டன் பிற்மன் பரீட்சைகள் நிறுவனத்தால் பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
4. திட்ட அமுலாக்கல் அமைச்சினாலும் இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ் / ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து ஆகியவற்றை வேறெங்காவது பயின்ற பிற்பாடு S. T. C A. தோவுக்கும் தோற்றி ஒரு தராதரப் பத்திரத்தை பெறுவதில் நியாயம் உண்டு

37 (149), சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.

(வடக்கில் வேறு நிறுவனங்கள் எமக்கில்லை) (2434)



ஆண்டவன் படைப்பு 29 - 11 - 1957

அரக்கர்களின் அழிப்பு 8 - 4 - 1986

திதி: 6 - 4 - 1988

மாங்குளம் ஊரதனில் செங்குருதி சிந்தி தன் னுயிர் நீத்த மண்கும்பான் நகர் வாழும்

திரு. மதியாபரணம் ஜெயராஜா அவர்களின்

## இரண்டாம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி

அருமை மகனே ஜெயராசா
அன்பு நிறை அரும் ரோசா
ஈராண்டு போயினும் எமராசா
எங்கள் நெஞ்சில் நீ தனிராசா
எங்கள் விழியில் பேராறு
எவ்வழி சென்ருய்? எனக்கூறு
எங்கள் நெஞ்சில உன்பேரு
ஈசன் பாதம நீ சேரு

உன பிரிவால் துயருறும்! தாய், சகோதரங்கள், அத்தான்மார், அண்ணிமார், மைத்துனர்கள், மருமக்கள், (2402)

## VACANCIES

Applications are invited from Suitable candidates for the following:-

(I) RESIDENT WARDEN — A mature Female of high integrity, fluent in English, GCE(A.L) / TrainedTeacher, preferably with girls' hostel management experience Retired persons too will be considered.

Salary attractive, negotiable.

(II) RESIDENT MATRON - Female, with fair knowledge of English, minimum of GCE (O.L.) qualification, preferably with hostel experience.

Salary attractive, negotiable.

Applications with complete bio - data, copies of certificates, and names and addresses of two non related referees should reach this office on or before the 20th April 1988.

Canvasing in any form will be a disqualification

The President.
WILLIAM MATHER MEMORIAL—
—WOMENS, CENTRE,
Maruthanamadam,
CHUNNAKAM. (2423)

## 2ஆம் வருட நினைவஞ்சலி



அன்னை மடி: 2 - 9 - 1966

இறைவன் அடி: 6 - 4 - 1986

செந்திவடிவேல் ஸ்ரீதரன்
தியாக தீபம்
மண்ணின் மைந்தன்
சின்னக் கோபு

ஆர்ப்டரிக்கும் பேரலைகள்
ஆழ்கடலில் ஆர்ப்பரிக்கும் பேரலைகள்
அலை கூறும் உன் புகழ்கள்
அழிந்திடாத உன் நினைவுகள்
அவை என்றும் நிலைத்திடும
அமரகாவியங்கள்

பெற்ரோர், உற்ரூர், உறவினர், நண்பர்கள்.

காங்கேசன்துறை வீதி, வல்வெட்டித்துறை. (2425)

## ★ நீங்கள் விரும்பும் புதிய பாடல்கள் வெளிவந்துள்ளன

★ நீங்கள் விரும்பும் புதிய. பழைய பாடல்களை பதிவு செய்து கொள்ள இன்றே நாடவேண்டிய ஸ்தாபனம்

## விக்ரர் அன் சன்ஸ்

இல 100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

★ உங்கள் மின்சார உபகரணங்களையும்
★ றேடியோ, மணிக்கூடுகள் யாவற்றையும் சிறந்த முறையில் திருத்திக்கொள்ள

VICTOR & SONS
No 100. Stanley Road, JAFFNA

## Niru Tuition Centre

KONDAVIL


# A/L 88 Paper Class

பௌதிகவியல்
திரு. சௌந்தி B.Sc. (Hons)
TUE., THU — 430 p.m,
PURE — புள்ளிவிரவியல்
APP — எண்ணிப் பெருக்கம்
— காளிப்பெருக்கம்
திரு. கிருஷ்ணு B Sc. (Hons)
TUE., THU : 1 — 3 p m. (2439)

## நினைவஞ்சலி

(6-4 1988)





திருமதி சின்னப்பிள்ளை கந்தர் [தாய்]
அன்னையின் மடியில் 04-06-1930 — ஆண்டவன் அடியில் 09-04-1985

க. தவபாலசிங்கம் (குஞ்சு) [மகன்]
அன்னையின் மடியில் 27-03-1959 — அரக்கரின் பிடியில் 30-03-1987

அன்பால் எம்மைக் கவர்ந்திட்டீர்
அகலாத் துணையாய் இருந்திட்டீர்
துன்பால் இன்று நாம் வாடச்
சொல்லாய் ஆகிப் பிரிந்திட்டீர்
உம்போல் இனியர் யாருளர்
உற்றதுணையாய் உயர்ந்த உறவே
உங்கள் பிரிவினை எப்படித் தாங்குவோம்
உம் ஆத்மா சாந்திக்காக ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர் (2421)

## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் சங்கீதபூஷணம் R. N. சண்முகலிங்கம்

அவர்களது ஈமச் சடங்கிற் கலந்து கொண்டும். அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மலர் மாலைகள், மலர் வளையங்கள் சமர்ப்பித்தும் எமது துக்கத்திற் பங்கு கொண்ட அனைவர்க்கும் எமது நன்றி.

எதிர்வரும் 7-4-88 வியாழக்கிழமை எம் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திற் கலந்து கொண்டு அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இ. நா சண்முகலிங்கம் குடும்பத்தினர்
92, பழம்ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

[2743]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.ஜி.ஆருடன் இரட்டை இலைசின்னமும் புதைக்கப்பட்டுவிட்டது

## முந்தானைகள் மோதலில் தமிழகம் சீரழியக்கூடாது

### டைரக்டர் ராஜேந்தர் பேட்டி

சென்னை, ஏப் 5

எம் ஜி. ஆரோடு இரட்டை இலையையும் புதைத்து விட்டார்கள். முந்தானைகள் மோதலில் தமிழகம் சீரழியக்கூடாது டைரக்டர் ராஜேந்தர் மேற்கண்டவாறு 'தேவி' வாரப் பத்திரிகைக்குப் பேட்டியளித்தார்.

அவரிடம் கேட்கப் பட்ட கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:-

கேள்வி :- உங்களுடைய கண்ணோட்டத்தில எம். ஜி. ஆரின் மறைவுக்குப் பிறகு நம்ஊர் அரசியல் எப்படி இருக்கிறது?

பதில்:- எம். ஜி ஆர். மறைவுக்குப் பிறகு பயங்கர குழப்பமாக இருந்து வருகிறது.

அ. தி. மு. க. வினர் அரசியலை கொச்சைப் படுத்தி விட்டார்கள் அசிங்கப்படுத்திவிட்டார்கள். நாடாளுமன்றத்தில் 5 லட்சம் ரூபாஎன்று சூட்கேஸ் காட்டப் படுகிற அசிங்கம் நாற்றமெடுக்கிறது

**எம். ஜி, ஆர்**

கே :- இதற்கெல்லாம் காரணமாக வேர்இருந்திருக்குமல்லவா?

ப :- நிச்சயம் அந்த வேர் எம். ஜி.ஆர். தான்! ஜனநாயக ரீதியில் அவர் கட்சியை வளர்க்கவில்லை. சட்டமெல்லாம் கிடையாது. கவர்ச்சி மட்டுமே க சியில் இருந்தது வேறு லட்சியம் எதுவுமில்லை. தனி மனித அரசியல் தான் அந்தக் கட்சியிலிருந்தது

அவர் இறந்ததும் குழப்பங்கள் வரும் என்றுஎதிர்பார்த்தது உண்மைதான் ஆனால் இவ்வளவு மோசமாக ஆபாசமாக இருக்கும் என்று நினைக்கவில்லை.

**இரட்டை இலை புதைத்தனர்**

எம் ஜி ஆரைபுதைத்த போது கட்சிக் கொடியோடு, கட்சியையும் இரட்டை இலைச் சின்னத்தையும் சேர்த்தே புதைத்து விட்டார்கள். நிச்சய ஒருவருக்கொருவர் அடித்துக்கொள்வார்கள். சீரழிந்து சின்னா பின்னமாகிவிடு வார்கள் என்று தெரியும். ஆனால் இவ்வளவு பயங்கரமாகவா?

இரண்டாவது ரீல் பார்க்கும் போதே 16. வது ரீல் இப் டித்தான் இருக்கும் என்பதைக் கணித்துச் சொல்லும் பக்குவம்இருந்ததால் அரசியலிலும் அப் டித்தான் வரும் என்பதை என்னால் ஊகிக்க முடிந்தது

**சக்களத்தி சண்டை**

கே:- இப்போதைய குழப்பங்களுக் கெல்லாம் எம் ஜி. ஆர் தான்காரணம் என்கிறீர்கள். இப்போது அங்கே எதற்காக சண்டை நடக்கிறது என்று கருதுகிறீர்கள்?

ப:- சக்களத்தி சண்டை எதற்காக நடக்கும்? சின்னவீடு யார், பெரிய வீடு யார் என்பதால் ஏற்பட்ட பிரளயம்,

முந்தானைகளின் மோதலில் சிதறி விடக்கூடாது. தமிழக மக்களின் சிந்தனை —சேலை கட்டிய மாதர்களின் குழாயடிச் சண்டையில் தமிழக மக்கள்குழம்பிப் போய்விடக்கூடாது

**கொள்ளையடித்த பணம்**

கே :- என்னதான் நாம் பேசினாலும் ஜெயலலித வுக்கு கூட்டம் சேருகிறது என்றுர்களே?

ப:- கையில் பணம் இருக்கிறது விளையாடிப் பார்க்கிறார்கள். கொள்ளையடித்தகோடிப் பணம் இப்போதுதான் வீதிக்கு வருகிறது முன்பு இதே ராஜேந்தர் சொன்ன போது நம்ப மறுத்தவர்கள்இடபோது உணரத் தொடங்கிஇருக்கிறார்கள்.

**மாயை**

கே :- 'ஜா' 'ஜெ' அணிகள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப :- எந்த அணியைப் பற்றியும் எனக்குக்கவலை. இல்லை-

என் பணிகள் பற்றித் தான் எனக்குக்கவலை படத்துறைக்கு அப்பாற் பட்ட ஒரு பணி, தமிழ்ச் சமுதாயம் கெட்டழிந்து விடக் கூடாதே, தமிழினம், தமிழகம் தாழ்ந்து விடக்கூடாதே என்ற பதைபதைப்பு எனக்கு இருக்கிறது மீண்டும் மாயைக்கு பலிஆகிவிடக் கூடாதே என்பது தான் என்கவலை.

கே:- சினிமாக்காரர்கள் இப்போது அதிகமாக அரசியலுக்கு இழுத்து வரப் டுகிறார்களே, இது உங்களுக்கு உடன்பாடானது தானா?

ப:-சினிமாக்காரர்களை அரசியலுக்கு இழுப்பதை நான் எதிர்க்கிறேன் வெறுக்கிறேன்

**மர்மம்**

கே:- எம் ஜி ஆர். சாவில் மர்மம் இருக்கிறது என்கிறார்களே, அது பற்றி என்ன சொல்ல நினைக்கிறீர்கள்?

ப:-இதெல்லாம்நாட்டு நலனுக்குத்தேவைதானா? இந்த நாடு செய்த கர்மம் அதனால்தான் இவர்களிடம் மாட்டிக் கொண்டு முழிக்கிறது மர்மம்.

**அரசியல் விபசாரம்**

கே:- இதற்கே இப்படி கடுமையாகச்சொல்கிறீர்களே, எம். எல். ஏக்களை ஊர் ஊராக கடத்திச் சென்று வேடிக்கை காட்டியதை எப்படிச் சொல்வீர்களோ?

ப:- அது அரசியல் விபசாரம். ஜனநாயகத்தை குழி தோண்டிப் புதைப்பதற்காக கொடுக்கப் பட்ட அச்சாரம்.

**காங்கிரஸ் குள்ளநரி**

கே:- இ. காங்கிரஸ் தமிழக அரசியல் நடந்து கொள்ளும் முறை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப:- இ. காங்கிரஸ் நடந்து கொண்ட முறை பற்றி சிவாஜியேசொல்லி விட்டார். அது ஒருகுள்ள நரி என்று அதுவே எனக் குப் படுகிறது சரி என்று என்னைப்பொறுத்தவரை இ. காங்கிரஸ் கட்சியானது ஜனநாயகத்தை குழி தோண்டி புதைக்கிற கிட்சியாகத்தான் தெரிகிறது. [இ]

## தமிழகத்திலிருந்து

# எம். ஜி. ஆரின் கட்சி இனி ஆட்சிக்கு வராது

### சிதம்பரம் சொல்கிறார்

சத்தியமங்கலம், ஏப் 5

தமிழகத்தில் இனி எம்.ஜி. ஆர். கட்சியின் ஆட்சிகிடையாது.

மத்திய மந்திரி ப. சிதம்பரம் இப்படிக் கூறினார்.

பெரியார் மாவட்டம் சத்தியமங்கலத்தில் காங்கிரஸ் பொதுக்கூட்டம் நடந்தது.

இதில் மத்திய மந்திரி ப. சிதம்பரம் கலந்து கொண்டு பேசியதாவது:

**கறுப்பு அத்தியாயம்**

எம். ஜி. ஆர். இறந்த பிறகு ஜானகி மந்திரி சபை பதவி ஏற்றது.

அவரது 23 நாள் ஆட்சியில் பணம் விளையாடியது. கள்ளச் சாராய வியாபாரிகள், வனத் துறை ஒப்பந்தக்காரர்கள் தான் ஆட்சி நடத்தினார்கள்.

எனவேதான் ஜானகி ஆட்சியை நாங்கள் பதவி நீக்கம் செய்தோம் சட்டசபை நிகழ்ச்சியும் ஒரு காரணமாகும். ஜானகி ஆட்சி செய்த அந்த 23 நாட்கள் தமிழகத்தின் கறுப்பு அத்தியாயம் ஆகும்.

**எம்.ஜி.ஆர்அரசுஇல்லை**

ஜானகி அரசு பதவி நீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அ.தி.மு.க. ஆட்சி தமிழகத்தில் முடிந்தது. இனி எம் ஜி ஆர். ஆட்சி தமிழகத்தில் வராது.

குறுக்கு வழியில் ஆட்சியை பிடிக்க காங்கிரஸ் நினைப்பதாக குற்றம் சாட்டப்படுகிறது. அப்படி நினைத்து இருந்தால் தமிழகத்தில் எப்போதோ காங்கிரஸ் ஆட்சி அமைந்து இருக்கும். ஆனால் நாங்கள் அப்படி நினைக்கவில்லை.

தேர்தல் எப்போது? வருகிற மே மாதம் 7 ஆம் திகதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுகிறது. அதைத் தொடர்ந்து 2 அல்லது 3 மாதத்தில் தேர்தல் வரும்.

காங்கிரஸ் ஆட்சி காலத்தையும், கழக ஆட்சி காலத்தையும் ஒப்பிட்டுப் பாருங்கள். ந்த காலத்தில் தமிழகம் முன்னேறியது என்பது தெரியும்.

1977 ஆம் ஆண்டுக்கு முன் பிறந்த இளைஞர்களுக்கு காமராஜரைப் பற்றி தெரியாது. அவர் சாகும் போது கூட அரசு ஓய்வு ஊதியத்தை வைத்துக்கொண்டு வாழ்க்கை நடத்தினார்.

**ஆட்சி கட்டிலில்**

தமிழக ஆட்சி கட்டிலில் ஒழுக்கமானவர்களை அமர்தத வேண்டும். அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் கூட்டத்தை ஆட்சியில் அமர்த்தக்கூடாது

இந்த ஆண்டு தமிழக பட்ஜெட்டில் பல நல்ல திட்டங்கள் உங்களுக்காக அறிவிக்கப் ட்டு உள்ளன.

**முடிவு செய்யுங்கள்**

தமிழகத்தில் கவர்னர் ஆட்சி எத்தனை காலம் நீடிக்க வேண்டும் என்பதை தமிழக மக்களாகிய நீங்கள் தான் முடிவு செய்ய வேண்டும்

அதே போல தமிழகத்தில் யார் ஆட்சிக்கு வர வேண்டும் என்பதை முடிவு செய்யும் அதிகாரம் உங்கள் கையில்தான் உள்ளது

தமிழகத்தில் காங்கிரஸ் ஆட்சி மலரச்செய்வதும் உங்கள் பாதங் கல்ளிதான் உள்ளது

இவ்வாறு அவர் பேசினார். (இ)

### கருத்தடை சிகிச்சை

# சன்மானப் பணம் யாழ்ப்பாணத்திற்கு இல்லை

யாழ்ப்பாணம், ஏப்6

யாழ். மாவட்டத்தில் தினமும் பத்துக்கும் மேற்பட்டோர் கருத்தடைச் சிகிச்சை மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு சிகிச்சை பெறுபவர்களில் பெண்களே அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை கருத் தடைச் சிகிச்சை செய்து கொள்வோருக்கான சன்மானப் பணம் கடந்த ஜூன் மாதம் முதல் எவருக்கும் வழங்கப்படவில்லை. எனத் தெரியவருகிறது கடந்வருட ஜூன் மாதம் முதல் ஐந்நூற்றுக்கும் மேற்பட்டோர் இவ்வாறு கருத்தடைச் சிகிச்சை செய்தும் சன்மானப் பணம் ரூபா ஐந்நூறுகப் பெற முடியாத நிலையில் இருக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவரை இது குறித்துக் கேட்டபொழுது கொழும்பில் இருந்து காசோலைகள் கிடைக்கப் பெறுகதாலும், யாழ் செயலகம் ஸ்தம்பித்திருந்ததன் [illegible] வழங்கப் படவில்லை எனத் தெரிவித்தார். [ஓ 10]


கொழும்புப் பயணிகளுக்கு ஓர் நற்செய்தி!

ஹோட்டல் சீவம்ஸ்

உங்களை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது!

- இருவருக்கான அறைகள் (Double Room)
- தனி அறைகள் (Single Room) மற்றும்
- கட்டில் (Bed)

முறையிலும் நியாயமான வாடகையில் நாள் அடிப்படையிலும் கொடுக்கப்படும்

- சாப்பாடு வசதிகளும் செய்து கொடுக்கப்படும்,

இன்றே விஜயம் செய்யுங்கள்!

**Hotel Seivams**

(இங்ஸ்லி தியேட்டருக்கு அண்மையில்)
இல. 19, சங்கமித்த மாவத்த, கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13
தொலைபேசி: 26522

பிரயாண ஒழுங்குகள் தொழில் வசதி

- சவூதி அரேபியா (Saudi Arabia)
- சர்வகலாசாலை (University)
- வைத்தியசாலை (Hospital)

1. பூச்சி கட்டுப்பாட்டுப் போதனையாளர் (Pest Control Advisors)
2. பூச்சி கட்டுப்பாட்டாளர் (Pest Controller)
3. பூச்சி கட்டுப்பாட்டு வேலையாள் (Pest Control Labour)
4. வேலை மேற்பார்வையாளர் (Labour Supervisors)
5. வேலையாள் (Labourer)
6. கூலியாட்கள் (Porters)

(4–6: பொது வேலை)

- உணவு பரிசாரக கிளினேர்ஸ் (Catering Cleaners)

விவசாய - மலேரியா பகுதியில் தற்போது வேலை செய்பவர்க்கு அரிய சந்தர்ப்பம்

வீட்டுப்பணிப் பெண்கள் (House Maid)

டுபாய் - குவையிற் - சவூதி
வயது 18க்கு மேல் 30 வயதுக்கு மேற்படடோர்

உங்கள் மேலதிக விபரங்களுக்கு உடனடியாகத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**I. Indranathan**

**'M' Three Travels**

College Road, Sothy Lane, Kankesanturai
(Bus Route 769) (2273)

யாழ்நகரில் புதியதோர் ஜவுளி உலகம்

சிந்து பைரவி
SINTHU BHIRAVI

- திருமண பட்டுப்புடவைகள்
- இறக்குமதி செய்யப்பட்டசாறி சமுத்திரத்தில்

- எமரல்ட் குயின்
- சித்திரா
- ருவிங்கிள் குவீன்
- சுப்பர் மைக்ரோ
- சிங்கோ ஸ்ரார் கொலெக்ஷன்
- சோனியா கொலெக்ஷன்
- லேடி கமில்டன்
- சாறி குயின்
- பூணம்
- நதியா கொலெக்ஷன்
- பான்லி சற்றின்
- கோயிங் எவே
- கிளியோ பெற்ரு
- தீரா
- அமலா



ஆண், பெண்களுக்குரிய அனைத்து மில் ஜவுளிகளும் நிதான விலையில் கிடைக்கும் புதியதோர் நிறுவனம்

சிந்து பைரவி
No 48, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்

உடனடியாக வேலை வாய்ப்புகள்

★ SAUDI ARABIA
★ 100 CLEANERS 300 S.R

100 பேர் உடனடியாகத் தேவை.
சாப்பாடு, தங்கும் இடம் இலவசம்
(10 நாட்களுக்குள் பிரயாணம் மேற்கொள்ளலாம்.)
வயது 21 தொடக்கம் 49 வரை
பாஸ்போட், 3 படம் மட்டும் தேவை.

★ KUWAIT
★ CLEANERS 30 K.D

மற்றும் சிங்கப்பூர், Kuwait, Abudhabi ஆகிய நாட்டிற்கு House Maid தேவை.
கலர் படம் மற்றும் 3 பாஸ்போட் சைஸ் படத்துடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

**T. V. Travels & Tourist**

rown Road KOKUVIL
(Kokuvil Railway Station Front)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு மற்றுமொரு பொருளாதார இழப்பு

## பிரிட்டிஷ் எயர்வேஸ் விமானங்கள் இங்கு தரித்துச் செல்லமாட்டா

கொழும்பு, ஏப் 6

இலங்கையின் பொருளாதாரத்தில் மற்றொரு வீழ்ச்சி ஏற்படவுள்ளது. இம்மாத இறுதியுடன் 'பிரிட்டிஷ் எயர்வேஸ்' நிறுவனத்துக்கு சொந்தமான விமானங்கள் எவையும் இலங்கையில் தரிக்கமாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

நாற்பது வருடகாலமாக தொடர்ச்சிய இலங்கையினூடாக பயணிகளை ஏற்றி - இறக்கி புகழ்பெற்ற சேவை செய்த இந்த நிறுவனத்தினரின் அறிவிப்பால் இலங்கையின் பொருளாதாரத்தில் மற்றொரு வீழ்ச்சி ஏற்படும் என பொருளாதார வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இலங்கையின் பிரதேசத்துக்கு மேல் பறப்பதற்கான வரிகள் — விமான நிலையத்தில் இறங்கி தளத்தில் நிற்பதற்கான வரிகள் உட்பட ஏற்படும் செலவினங்களை ஈடுசெய்யப் போதுமான பயணிகள் இலங்கையினூடாக பயணம் செய்வதில்லை என்பதால் விமான சேவை கம்பனிக்கு ஏற்படும் நஷ்டத்தை கருத்தில் கொண்டே பிரிட்டிஷ் விமான சேவையினர் மேற்படி முடிவு செய்ததாக விமான நிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சிங்கப்பூர் எயர்லைன்ஸ் நிறுவனமும் இலங்கையூடாக ஏனைய நாடுகளுக்கு நடத்தி வரும் தமது சேவையை நிறுத்தப் போவதாகவும் மே மாதம் முதல் இலங்கை-சிங்கப்பூர் சேவையை மாத்திரமே இந்நிறுவனத்தினர் மேற்கொள்ளப் போவதாகவும் அறியப்படுகிறது.

மிகப் பெரிய விமான நிறுவனங்களான பிரிட்டிஷ் 'எயர்வேஸ்' உம் சிங்கப்பூர் எயர்லைன்சும் மேற்குறிப்பிட்டபடி தமது முடிவுகளை அமுல் செய்யும் பட்சத்தில் இலங்கை அரசு எதிர்பார்க்கும் பல கோடி ரூபா வெளிநாட்டு நாணய சம்பாத்தியத்தை இழக்கும் எனவும் இது இலங்கையின் பொருளாதாரத்தில் மற்றொரு பாரிய வீழ்ச்சியாக அமையும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-27)

## தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், ஏப், 6

தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி நெறிக்கு ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி நடைபெற உள்ளது.

மேற்படி பரீட்சை கடந்த 29, 30 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டபோதிலும் நாட்டின் சூழ்நிலை காரணமாக பல ஆசிரியர்கள் இதில் கலந்துகொள்ள முடியவில்லை.

இதனைக் கருத்தில் கொண்டே இப்பரீட்சையை எதிர்வரும் 8ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ் கல்வித் திணைக்களத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே சமுகமளிக்கத் தவறிய ஆசிரியர்கள் இத்திகதியில் தோற்றும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள்,

மேலும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் பயிற்சி பெறுக ஆசிரியர்கள் எவராவது இருப்பின் அவர்கள் விண்ணப்பப் படிவங்களை அனுப்பாவிட்டாலும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

எனவே அவர்களும் இப் பரீட்சைக்கு தோற்றும்படி கேட்கப்பட்டிருக்கிறார்கள்

(இ-க-சி)

## வித்தியாலய வளர்ச்சிக்கு ஆணிவேராக இருந்தவர்

### பிரியாவிடை வைபத்தில் உரை

வட்டுக்கோட்டை, ஏப் 6

மாணவர்களது கல்வி வளர்ச்சியிலும் நல்லொழுக்கத்திலும் கண்ணும் கருத்துமாக இருந்து ஆசிரிய சேவை ஒரு புனிதமான சேவை எனக் கொண்டு அல்லும் பகலும் அயராது பணி புரிந்த பெருமை எமது உப அதிபர் செல்லையா அவர்களுக்கே உண்டு. எமது வித்தியாலய வளர்ச்சிக்கு ஆணிவேராக திகழ்ந்த ஆசிரியர் செல்லையா இளைப்பாறுவது எமக்கு பேரிழப்பாக அமைகின்றது.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய உப அதிபர் திரு எஸ். செல்லையா சேவையிலிருந்து இளைப்பாறுவதை முன்னிட்டு நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில் பாராட்டுரை வழங்கிய செல்வன் கெங்காதரம்பிள்ளை சுரேஸ்குமார் மேற்கண்டவாறு கூறினார்.

இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை தலைமையில் வைபவம் நடைபெற்றது.

அதிபர், ஆசிரியர், மாணவர், பழையமாணவர் இணைந்து மிகக் கோலாகலமாக நடத்திய இவ்விழாவில் நடனம் முதலான கலை நிகழ்ச்சிகளும் பல இடம் பெற்றன.

செல்வி நிருபா அம்பிகாவதி பாராட்டுரை வழங்கிய போது மாணவர்கள் நல்லவர்களாகவும் வல்லவர்களாகவும் வாழ வழிகாட்டியவர் என்றும் கற்பித்தல் துறையிலே மிக அனுபவம் உள்ளவர் என்றும் கூறினார்.

பழைய மாணவர்கள் சார்பில் தங்கப்பதக்கமும் பாடசாலை மாணவர்கள் சார்பில் மோதிரமும் அணிந்து கௌரவிக்கப்பட்டது. (இ-161)

## மக்கள் முகம்

### வள்ளுவர் சனசமூக நிலையம்

அண்ணுசிலையடி வள்ளுவர் சனசமூக நிலைய 1988 ஆண்டிற்கான புதிய உத்தியோகத்தர் தெரிவு அண்மையில் மேற்படி நிலையத்தில் நடைபெற்றது:-

தலைவர்:- மா. பரமானந்தம் உப. தலைவர்:- தா. சண்முகம் செயலாளர்:- சி. தர்மகுலசிங்கம் பொருளாளர்:- க. பட்டுலிங்கம் நூலகர்:. வெ. சுப்பிரமணியம் பாலர் பாடசாலைப் பொறுப்பாளர்:- ப. சிவகுரு பரிசோதகர்:- சிவப்பிரகாசம் காப்பாளர்:- மு. கணேசு.

அத்துடன் நால்வர் நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவாகினர்.

[இ – க –160]

### வடமாகாண ஆசிரியர் சங்க சகாய நிதி

பண்டத்தரிப்பு, ஏப் 6

காங்கேசன்துறை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா, வடமாகாண ஆசிரியர் சங்க சகாயநிதியின் தலைவராகப் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற சகாயநிதியின் 28 ஆவதுவருடாந்த பொதுக் கூட்டத்தின் போது இத்தெரிவு இடம் பெற்றது.

திரு. பி. எஸ். குமாரசாமி தலைமையில் நடந்த உத்தியோகத்தர் தெரிவின் போது திரு இ மகேந்திரன் செயலாளராகவும் திரு. பி. கமலநாதன் பொருளாளராகவும் திரு. சு. தர்பரானந்தன் உப செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

### பாடசாலை அபி. சங்கம்

சாவகச்சேரி, ஏப்6

கைதடி நுணுவில்தமிழ் வித்தியாசாலையின் அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் அதிபர் திரு. க. இளையதம்பி தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. க.இளையதம்பி [அதிபர்] செயலாளர்:- திரு சு. கந்தசாமி பொருளாளர்:- திரு. ச. நடேசபிள்ளை (ஆசிரியர்)

[இ-13]

### நிர்வாகிகள்

யாழ்ப்பாணம் ஏப் 6

பலாலி ஆசிரியர் கலாசாலை - மாணவர்மன்றத்தின் 1988 ஆம் ஆண்டுக்கான நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவாகினர்.

தலைவர்: பொ. பாலச்சந்திரா, செயலாளர்: மா. பரமநாயகம், பொருளாளர்: திருமதி லலிதா பத்மநாதன்.

மற்றும் உப தலைவர், உப செயலாளர், உப பொருளாளர் உட்பட 19 பேர் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்றும் தெரிவு செய்யப்பட்டது.


[ஒ]

### கோழிகளுக்கு நோய்த் தடுப்பூசி

யாழ். கால்நடை வளர்ப்போர் சங்க சுன்னாகம் கிளையினர் நாளை வியாழக்கிழமை சுன்னாகம் அம்பேத்கார் சன சமூக நிலையத்தில் கோழிகளுக்கு நோய் தடுப்பூசி ஏற்றும் இலவச பணியை செய்யவுள்ளனர்.

நாளை வியாழக்கிழமை காலை 9 30 முதல் 10.30 வரைசுன்னாகம் வடக்கு சனசமூக நிலையத்தில் காலை 10.45 முதல் 11.30 வரை கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலையிலும் நண்பகல் 11.45 முதல் 12 30 வரை சுன்னாகம் அம்பேத்கார் சன சமூக நிலையத்திலும் கோழிகளுக்கு நோய் தடுப்பூசி மருந்து கொடுக்கப்படவுள்ளது


## 6ஆம் மாத நினைவஞ்சலி



கதிர்காமதாஸ்

தோற்றம்: 26 - 08 - 1955 மறைவு: 11 - 10 - 1987

பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
அன்பிற்கோர் அண்ணனாய்
அறிவூட்டும் ஆசானாய்
நிற்கும் இடமெல்லாம் நிழல்போல் தொடர்ந்து - நாம்
கற்கும் செயல் முறையை கண்காணித்து வந்த
நற்குரு ஒருவரை நாம் இழந்து தவிக்கின்றோம்
தாதியர் பாடசாலைத் தரத்தினை உயர்த்திடவே,
நீதியின் வழியில் நின்கடமை தொடருகையில்
பாதியில் எம்மைப் பரிதவிக்க விட்ட
சேதி தான் என்ன தெய்வமே கூறுயோ
கடமையிலே கண்ணியன் நேர்மையிலே சிகரம்
காரியத்தை முடிக்கும் வரை கண்துஞ்சாத் தீரன்
கனிவான மொழியிலே மாணவரின் தோழனாய் திகழ்ந்து – இன்று
கண்ணீரில் விடைபெற்றார் கதிர்காமதாஸ் மாஸ்ரர்!
சேவைக்கெனவே பிறந்து விட்ட செம்மலே -நீர்
இங்கு வந்து ஓராண்டு முடிவதற்குள் -உமை
யார் கொண்டு சென்றார் எம்மைப் பிரிந்து... ஆனாலும்
நூற்றாண்டு சென்றாலும் மாறாதையா உம் நினைவு

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
தாதிமார் பயிற்சிப்பாடசாலை,
யாழ்ப்பாணம் (2429)

## தொழிற் பயிற்சிகள்

★ Computer Programming in BASIC Language
காலம்; 4 மாதம் முழுக் கட்டணம்: 1000/-

★ Computer Programming in COBOL (Basic Language)
(படித்தவர்களுக்கு மட்டும்)
காலம்: 4 மாதம் முழுக்கட்டணம்: 1000/

★ றேடியோ, ரெலிவிஷன் றிப்பியறிங்
காலம்: 3 மாதம் முழுக்கட்டணம்: 750/-

★ வீடியோ. டெக் றிப்பியறிங்
காலம் : 3 மாதம் முழுக்கட்டணம் 800/-

★ றீவைண்டிங்
காலம் : 3 மாதம் முழுக்கட்டணம்: 1000/-

★ எலெக்ரிக்கல் வயறிங்
காலம் : 2 மாதம் முழுக்கட்டணம்:500/-

★ ENGINEERING DRAWING
[For 1st year Engineering faculty students]

ஆரம்பம்:
06-04 88 (கிழமை நாட்களிற்கு) 9-30 a.m
09-04-88 (சனி ஞாயிறு) 9-30 a m.

Jaffna Technical Institute
ஸ்ரான்லி வீதி,
[றெயில்வே கடவையருகாமை]
யாழ்ப்பாணம்.

## Computer Programming and Data Processing Course

BASIC LANGUAGE

6 Months - Weekend

by

Qualified, Experienced and dedicated panel of lecturers and Instructors.

ஆரம்பம் : 9 - 4 - 88

FEES - Rs. 1,500/-
(தவணை முறையிலும் செலுத்தலாம்.)

எமது குளிரூட்டப்பட்ட கொம்பியூட்டர் அறையில் 60 மணித்தியாலங்களுக்குக் குறையாத Practicals. பயிற்சி முடிவில் சித்தியெய்துவோருக்குச் சான்றிதழ் வழங்கப்படும்.

HARVARD Institute
Successor of
CANTABIA INSTITUTE
Sister Organisation of
OXONIA, COLOMBO.
13, Rasavinthoddam Lane,
(ஸ்ரான்லி வீதி முடிவுக்கருகாமையில்)
Jaffna.

## யா. தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் 1988

இடம்: யா/மகாஜனக் கல்லூரி- தெல்லிப்பழை
காலம்: 1988-04-10 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி
தலைவர்: திரு க நாகராசா அவர்கள்
[மகாஜனக் கல்லூரி அதிபர்]

மேற்படி கூட்டம் காலை 8 மணிக்கு ஆரம்பமாகி வழமையான நிகழ்ச்சிகளுடன் நடைபெறும்

ஆயுட்கால அங்கத்தவர் தவிர்ந்த ஏனைய அங்கத்தவ தங்கள் சந்தாப் பணத்தைச் செலுத்தவோ, மதிய போசனத்தில் பங்கு பற்றவோ விரும்பினால் சங்கப் பொருளாளருடன் கல்லூரியிற் தொடர்பு கொள்ளலாம்.

அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகந்தந்து விழாவைச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். நாட்டு நிலமை காரணமாகத் தனிப்பட்ட அழைப்புக்கள் அனுப்ப முடியாமைக்கு வருந்துகின்றோம்.

திரு க நாகராசா
தலைவர்
(2737)

திரு நா தவநாதன்
திருமதி. பா வாமதேவன
இணைச் செயலாளர்கள்

## உதயா ஜுவலர்ஸின்

7 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எங்கள் அன்பு கனிந்த வாழ்த்துக்களையும் நன்றியையும் அறியத்தருகின்றோம்.

தரம் நாடுவோர் தவறாது நாடுவது உதயா.

அழகுக்கு அழகூட்டும்
பெண்மைக்கு மெருகூட்டும்
இளமைக்கு எழிலூட்டும்

நவநாகரீக நங்கையர்க்கேற்ற நவீன டிசைன் நகைகளை நல்ல முறையில் தேர்ந்தெடுக்க தலைநகரில் தலைசிறந்த தனிப் பெரும் ஸ்தாபனம் "உதயா ஜுவலர்ஸ்" என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். எமக்கு கிளை ஸ்தாபனமோ, துணைத் ஸ்தாபனமோ இடையாதென்பதையும் அறியத்தருகின்றோம்.

மீண்டும் நாடுங்கள்

உதயா ஜுவலர்ஸ்
188, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(2680)

## ஹோம் பிறன்ஸ்

யாழ்ப்பாணக்கிளை
பணவைப்பாளர்களின் சங்கம்

பொதுக் கூட்டம்

காலம்: ஞாயிற்றுக்கிழமை 10-4-88 காலை 9-30 மணி அளவில்
இடம்: வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபம், வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம்.

பணவைப்பு வைத்தவர்கள் எல்லோரும் தயவுசெய்து தவறாது சமுகமளிக்கவும் சந்தா பண ரசீதுடன் வரவும்

A. பாலகிருஷ்ணன்
(செயலாளர்)
2-4-88
(2426)

## இலங்கை நூலகச் சங்கம்

## நூலகவியற் பரீட்சைகள்

இடைநிலைப் பரீட்சை — பழைய பாடத்திட்டம்

1988 வைகாசி 7, 8

முதல் வருடம் — பழைய பாடத்திட்டத்தில் இறுதிப் பரீட்சை

1988 ஆனி 11, 12

1988 முதல் வருட வகுப்புக்கள் 17-4-88 இல் ஆரம்பம்.

மேலதிக விவரங்களுக்கும் விண்ணப்பப் படிவங்களுக்கும்:-

கா. மாணிக்கவாசகர்,
யாழ். மத்திய கல்லூரி,
யாழ்ப்பாணம்.
(2742)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயசங்கற்பம்

நாகரிகம் என்பது நாளாந்த தேவைகளைப் பெருக்கிக் கொள்வது அல்ல. தானாகவே விரும்பித் தேவைகளை வெகுவாகக் குறைத்துக் கொள்வதே நாகரிகமாகும்.

— காந்தி அடிகள்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல:-298/2 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
06-04-1988 த.பெ.இல:-23

# மீனுக்கள் பெருகட்டும்!

அமெரிக்காவில் வாழும் ஈழத் தமிழ் பெண்மணியான திருமதி மீனு ஸ்ரீகரனின் பரோபகார சிந்தையைப் பாராட்டுகிறோம்.

அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த வளலாயில், கடந்த மே மாதம் இடம்பெற்ற இராணுவ அரக்கத் தனங்களின் போது, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் பேர் கொல்லப்பட்டனர். அந்தக் குடும்ப அங்கத்தவர்களில் மூன்றே மூன்று பேர் மட்டும் உயிர் தப்பினர்.

அவர்களுக்கு உதவுமுகமாக, அந்த அமெரிக்க ஈழத் தமிழிச்சி ஆறாயிரம் ரூபாவை அனுப்பி வைத்திருக்கிறார். அவர் அனுப்பிய பணம் யாழ் இன்னர் வீல் கழகத்தினூடாக சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டு, தொழில் வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவில் வாழும் ஒருவருக்கு, இலங்கைப் பணத்தில் ஆறாயிரம் ரூபா பெரும் தொகை அல்ல என்பது உண்மைதான். ஆனால் தாம் பிறந்த மண்ணில் அவஸ்தைப் படும், மரண அபாயத்தில் இருந்து தப்பிய மூவருக்கு உதவ வேண்டும் என்ற நல்லமனம் அந்தப் பெண்ணுக்கு வந்தது ஒன்றே போதும், பாராட்டுவதற்கு.

ஈழத் தமிழர்களில் எத்தனையோ ஆயிரம் பேர் அக்கரைப் பசுமைகளை நாடி வெளிநாடுகளுக்கு சென்று விட்டார்கள். தங்கள் சொந்த மண்ணில் உண்டாகும் சங்கடங்களுக்கு முகம் கொடுக்க முடியாதவர்களாக, இன்னல்களைக் கண்டு பின்வாங்குபவர்களாக, கஷ்டங்களை அனுபவிக்க விரும்பாமல் வசதிகளையும் சொகுசுகளையுமே விரும்புபவர்களாக வெளிநாடுகளுக்கு ஓடியவர்கள் மிக மிகப் பலர்.

ஒரு வகையில் பார்த்தால், அவர்கள் நடப்பவற்றை எதிர் கொள்ளத் துணிவில்லாத கோழைகள் என்றுகூடச் சொல்லலாம். யாராவது பாடுபட்டு, உயிர் கொடுத்து உரிமைகளை பெற்ற பின்னர், இங்கு வந்து உரிமை கொண்டாடவும், வசதிகளை வளர்த்துக் கொள்ளவும் நினைத்து, பிறந்த தாயகத்தை விட்டு ஓடியவர்களும் பலர்.

தாம் பிறந்த மண்ணை மறந்து வெளிநாடு சென்ற குற்றத்துக்காக, பிராயச்சித்தம் செய்யும் விதத்தில் தாயக மக்களுக்கு தங்களால் இயன்ற வரையிலாவது உதவ வேண்டும் என்று நினைத்தவர்கள் எத்தனை பேர்? மிகச் சிலரே. அந்த வகையில் திருமதி மீனு ஸ்ரீகரன் ஒரு முன்மாதிரியானவர் — முன்னோடியானவர் எனலாம்.

பாதிக்கப்பட்ட தனது தாயக மக்களுக்கு உதவ வேண்டும் என அவர் காட்டிய முன்மாதிரியை மற்றவர்களும் பின்பற்ற வேண்டும்.

வடக்கு, கிழக்கில் கடந்த ஐந்து வருடங்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உதவுவதற்குப் பல வெளிநாடுகள் முன்வந்துள்ளன. வெளிநாடுகளில் உள்ள தொண்டர் நிறுவனங்கள் விருப்பம் தெரிவித்துள்ளன. அவை யாவும் பிறருக்கு உதவும் பரோபகார சிந்தையுள்ள மக்களின் பிரதிநிதிகள். ஆனால்...

தமது சொந்த மக்களுக்கு உதவ வேண்டும் என நினைத்த வெளிநாடு வாழ் ஈழத் தமிழர்கள் எத்தனை பேர்? நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர், நிதி குறைந்தவர் காசுகள் தாரீர், அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர் என்ற பாரதி வாக்கை நினைத்த ஈழத் தமிழர்கள் எத்தனை பேர்?

வெளிநாடுகளில் வாழும் ஒவ்வொரு ஈழத் தமிழனும் சிறு தொகை பணத்தையாவது அன்பளிப்புச் செய்யின், நிவாரண, புனர்வாழ்வுத் திட்டங்களுக்கு பிற நாடுகளை மட்டுமே நம்பி இருக்கும் கேவல நிலைமை உருவாகுமா?

அந்த நிலைமை மாறுவதற்கு பல்லாயிரம் மீனு ஸ்ரீதரன்கள் வெளிநாடு வாழ் ஈழத் தமிழர்கள் மத்தியில் உருவாக வேண்டும். பிறருக்கு உதவி செய்யும் நற்குணம் நம்மவர்களுக்கு வந்தால் சுதந்திரமும் சுபீட்சமும் இலகுவில் வந்து சேர்ந்து விடும்.

## சத்தியக் கடதாசிகள் அரசுக்கு

கொழும்பு, ஏப். 6

பூஸா முகாமில் தடுப்புக் காவலில் உள்ள 699 தமிழ் இளைஞர்கள் அரசாங்கம் வழங்கிய சத்தியக் கடதாசிகளை நிரப்பினர்.

இச்சத்தியக் கடதாசிகளை அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் குமார் பொன்னம்பலம் பூஸா முகாமுக்குக் கொண்டு போய் இளைஞர்களிடம் ஒப்படைத்தார்.

வெலிக்கடை முகாமில் தண்டனை அனுபவித்து வரும் 50 இளைஞரும் சத்தியக் கடதாசியில் கையெழுத்திட்டனர்.

இச்சத்தியக் கடதாசிகள் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளரிடம் ஒப்படைக்கப்படவுள்ளன. (எ)

## மொஸாம்பிக்கில் 360 கிளர்ச்சிக்காரர் மோதலில் பலி!

ஹராரே, ஏப். 3

மொஸாம்பிக்கில் கடந்த வாரம் அரசுப் படைகளினால் 360 கிளர்ச்சிக்காரர்கள் கொல்லப்பட்டனர் என்று அறிவிக்கப்பட்டது.

13 ஆண்டுகளாக கிளர்ச்சிக்காரர்கள் மொஸாம்பிக்கில் மார்க்ஸிஸ சார்பு அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த வாரம் அரசுப் படைகள் எடுத்த பெரிய இராணுவ நடவடிக்கையில் இவ்வளவு பெரும் எண்ணிக்கையில் கிளர்ச்சிக்காரர்கள் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது. (எ)

# போபால் விஷவாயு வழக்கு; இடைக்கால நிவாரணமாக 250 கோடி ரூபா வழங்க உத்தரவு

போபால், ஏப் 5

போபால் விஷவாயுக் கசிவு வழக்கில் பாதிக்கப்பட்டவர்களுக்கு 250 கோடி ரூபா இடைக்கால நட்டஈடாக வழங்கும்படி மத்தியப் பிரதேச உயர் நீதி மன்றம் யூனியன் கார்பைட் நிறுவனத்துக்கு உத்தரவிட்டது.

இடைக்கால நட்டஈடாக 350 கோடி ரூபாவை வழங்கும்படி மாவட்ட நீதிமன்றம் விடுத்த உத்தரவை ஆட்சேபித்து கார்பைட் நிறுவனம் உயர் நீதி மன்றத்துக்கு மேன்முறையீடு செய்திருந்தது.

அது சம்பந்தமான விசாரணையிலேயே முன் கண்ட தீர்ப்பை உயர் நீதி மன்றம் வழங்கியது.

1984 டிசம்பரில் கார்பைட் தொழிற்சாலையில் இருந்து வெளியேறிய நச்சுவாயுவினால் 2,500க்கு அதிகமானோர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. (எ)

## பஞ்சாப் மாநிலத்துக்கு மேலதிக இராணுவம்!

புதுடில்லி, ஏப் 5

பஞ்சாப் மாநிலத்தின் எல்லைப் புறப் பகுதிகளுக்கு மேலதிக பாரா இராணுவத்தை மத்திய அரசு அனுப்பிவைத்திருக்கின்றது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை 3 ஆயிரம் பாரா துருப்புக்கள் கலவரப் பகுதிகளுக்குப் போய்ச் சேர்ந்தன.

இதனிடையில் 553 கிலோ மீட்டர் நீள பாகிஸ்தான் பஞ்சாப் எல்லையில் பல கண்காணிப்புநிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. முட்கம்பி வேலிகளை அமைக்கவும் அரசு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

எல்லைப்புறப் பகுதி வாசிகளுக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படுகின்றது. (எ)

## வெளிநாட்டு வானொலிகள் மீது சோவியத் கண்டனம்!

மாஸ்கோ, ஏப் 5

சோவியத் யூனியனில் இடம்பெற்று வரும் ஆர்மெனியா, அஸர்பைஜன் மாநிலங்களுக்கு இடையேயான தகராறுகள் குறித்து செய்திகள் வெளியிட்ட விதம் குறித்துபி.பி.சி. வோய்ஸ் ஒப் அமெரிக்கா, லிபர்டி வானொலி ஆகியன கண்டிக்கப்பட்டன.

சோவியத் அரசு பத்திரிகை பிரவ்தா இக்கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. (எ)

## வத்திக்கான் சீன உறவு சீரடையலாம்

வத்திக்கான் நகர், ஏப் 5

சீனவுடனான ராஜதந்திர உறவுகள் எதிர்காலத்தில் சீரடையலாம் என்று வத்திக்கான் நம்பிக்கை தெரிவித்திருக்கின்றது.

வத்திக்கானுடனான ராஜதந்திர உறவுகளை சீன அரசு முப்பது ஆண்டுகளுக்கு முன்னரே துண்டித்துக் கொண்டது. [எ]

நிக்கரகுவாவில்

# 60 நாள் யுத்த நிறுத்தத்துக்கு வந்ததே ஆபத்து!

மனகுவா, ஏப் 5

நிக்கரகுவாவில் கடந்த முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த 60 நாள் யுத்த நிறுத்தத்துக்கு ஆபத்து வந்துவிட்டது.

கொன்றா கிளர்ச்சியாளர் தரப்பில் இருந்து இந்த ஆபத்து உருவாகியுள்ளது.

கைச்சாத்திடப் பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையை நிக்கரகுவா அரசு மீறிவிட்டதாக கொன்றா கிளர்ச்சியாளர் தலைவர் எட்வர்ட் பெலாஸே தெரிவித்தார்.

ஒப்புக்கொண்டபடி அரசியல் கைதிகளை நிக்கரகுவா அரசு விடுவிக்கவில்லை என்று கொன்றா தரப்பினர் முதலில் குற்றஞ் சாட்டினர்.

எல்லா அரசியல் கைதிகளை விடுவித்துவருகிறோம் என்று நிக்கரகுவா அரசு பதிலளித்தது.

மீண்டும் யுத்த நிறுத்த மீறல் குற்றச்சாட்டை கொன்றா தரப்பினர் சுமத்தியுள்ளனர்.

கிளர்ச்சியாளர் பகுதிகளில் நிக்கரகுவா படைகள் குண்டுகளைப் பொழிவதாக இப்போது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

யுத்தப் ஒன்றுக்கு மீண்டு தன்னைத் தயார் படுத்தும் முயற்சியாகவே கொன்றா கிளர்ச்சியாளர் யுத்த நிறுத்தத்தை ஒப்புக் கொண்டனரா என்ற சந்தேகம் நிக்கரகுவா அரசு வட்டாரங்களில் ஏற்பட்டுள்ளதாம். (எ)

## ஹெரோயின் வேட்டை

புதுடில்லி, ஏப். 5

44 கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதை வஸ்தை புதுடில்லி சுங்கத் திணைக்கள அதிகாரிகள் கடந்த திங்கள் கைப்பற்றினர்.

## சோவியத் யூனியன் அணுகுண்டு சோதனை

மாஸ்கோ, ஏப். 4

சோவியத் யூனியன் கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை நிலத்துக்கு அடியில் அணுக்குண்டு பரிசோதனை ஒன்றை நடத்தியது.

25 முதல் 100 கிலோ டன் சக்தி கொண்ட அணுக்குண்டே வெடிக்க வைக்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது (எ)

## மத்தியகிழக்கு பேச்சுக்கள் தொடருகின்றது!

அம்மான் ஏப். 5

இஸ்ரவேல் பிரதமருடனான பேச்சுக்கள் தோல்வியில் முடிவடைந்ததைத் தொடர்ந்து, அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் ஷுல்ட்ஸ் திங்கள் இரவு ஜோர்தான் பயணமானார்.

இஸ்ரவேல் பிரதமர் ஷமீர், அமெரிக்க அரசின் மத்திய கிழக்கு யோசனையை மீண்டும் ஏற்க மறுத்து விட்டார்.

வெளி உலகில்

## இரவுக் கிளப்புகளை மூடினால் நிர்வாணப் பேரணி
## நடன மாதுகள் எச்சரிக்கை

மணிலா, ஏப் 5

இரவுக்கிளப்புக்களை மூடினால் மணிலா வீதிகளில் நிர்வாணமாக நின்று ஆர்ப்பாட்டம் நடத்துவோம்.

கிளப்புக்களில் பணிபுரியும் ஆயிரக்கணக்கான இளம்பெண்கள் பிலிப்பீன்ஸ் அரசுக்கு இப்படி எச்சரிக்கை விடுத்திருக்கின்றனர்.

ஒரு நடனமாது பின்வருமாறு சொன்னார்:

சுலோக அட்டைகளை கைகளில் ஏந்திய வண்ணம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடமாட்டோம்.

அதற்குப்பதில் கோஷங்கள், கோரிக்கைகளை எம் நிர்வாண உடல்கள் மீது எழுதிக் கொண்டு ஊர்வலமாகப் போவோம்— இப்படி அவர் சொன்னார்.

கிளப்புக்கள் சங்கத்தலைவர் பெலிக்ஸ் எஸ்பிரிற்று கருத்து வெளியிடுகையில், "நிர்வாண ஆர்ப்பாட்ட பேரணியில் 60,000 வரையிலான பெண்கள் பங்குபற்றுவர் என்று எதிர்பார்க்கின்றேன்" — என்று சொன்னார். (எ)

# உயிர்த் தியாகத்துக்கு நாம் அனைவருமே தயார்

## மட்டக்களப்பில் உண்ணாவிரதம் இருக்கும் பூபதி கணபதிப்பிள்ளையின் பிள்ளைகள் உறுதி

மட்டக்களப்பு ஏப் 6

கொண்ட இலட்சியத்திற்காக எமது உயிரைத் தியாகம் செய்ய குடும்பத்தார் அனைவருமே தயார் நிலையில் உள்ளோம்.

மட்டக்களப்பில் மரண நோன்பு அனுஷ்டிக்கும் திருமதி பூபதி கணபதிப்பிள்ளையின் பிள்ளைகள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

திருமதி பூபதி கணபதிப்பிள்ளையின் ஆறு பிள்ளைகளில் ஒரு ஆண் பிள்ளைகள் 1986 ஆம் ஆண்டு ஸ்ரீலங்கா படையினரின் வேட்டுக்குப் பலியானார்கள்.

மேலும் ஒருவர் பூஸா முகாமிலிருக்கின்றார். தாயுடன் ஒருமகன் ஒரு மகள்மார் இருக்கின்றார்கள்.

பிள்ளைகள் மேலும் எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில்,

எமது தாயாரைஎவரும் வற்புறுத்தி இம்முடிவுக்கு வரவில்லை. அவரது முடிவு குறித்து தந்தை உட்பட எவரும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. பூரண சம்மதத்தை சமாதான நீதிபதி முன்னிலையில தெரிவித்து எழுத்தில் கொடுத்துள்ளோம்.

நாம் எக்காரணம் கொண்டும் இப்போராட்டத்தை சீர்குலைக்கவோ மாசுபடுத்தவோ மாட்டோம்

இப்படி அவர்கள் தெரிவித்தனர்.

திருமதி பூபதி கணபதிப்பிள்ளை தெரிவிக்கையில் நான் யாருடைய வற்புறுத்தலிலும் இம்முடிவுக்கு வரவில்லை என் மரணத்தைப் பற்றி கவலைப்படவில்லை.

என் மரணத்தை எந்நேரமும், எந்த வடிவத்திலும் ஏற்கத் தயாராகவிருக்கின்றேன் என்றார்.

அன்னையர் முன்னணி பேச்சாளர்களில் ஒருவரான திருமதி எஸ். ஒஸ்ரா எமது செய்தியாளரிடம் தெரிவிக்கையில், எமது இரு அம்சக் கோரிக்கைகளைப் பாரத அரசு ஏற்கும்வரை எமது போராட்டம் தொடரும். நாம் எந்த ஒரு இயக்கத்தின் பின்னணியிலும் செயற்படவில்லை.

திருமதி பூபதி கணபதிப்பிள்ளையை தொடர்ந்து மேலும் பல அன்னையர்கள் களத்தில் குதிக்கவிருக்கின்றார்கள் என்றார். (இ-21)

கிழக்கில் புதிதாக

## நவீன ஆயுதங்களுடன் முஸ்லிம் இயக்கம்?

கொழும்பு, ஏப்ரல் 6

முஸ்லிம் தீவிரவாத இயக்கம் ஒன்று கிழக்கு மாகாணத்தில் செயல்பட ஆரம்பித்துள்ளதா?

இப்படிப் பாதுகாப்பு வட்டாரங்கள் சந்தேகிக்கின்றன.

இதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த காலங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் நவீன தானியங்கித் துப்பாக்கிகள் பயன்படுத்தப் பட்டிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

'இஸ்புல்லா' என்ற பெயரில் இந்த இயக்கம் இயங்குகின்றதாம்.

இந்த இயக்கத்திற்கு வெளிநாடு ஒன்றின் உதவி இருக்கலாமென [illegible] (ஏ)

மூதூரில் முஸ்லிம்கள் கொலை:

# நடுநிசியில் மீன் கேட்டு வந்தவர்கள் எம்மீது சுட்டனர்

## மரண விசாரணையில் சாட்சியம்

திருகோணமலை, ஏப் 6

நடுநிசி நேரத்தில் நாங்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது படகில் வந்தவர்கள் மூவர் எங்களிடம் மீன் இருக்கிறதா என்று கேட்டு விட்டு எம் மீது சுட்டனர். அப்போது நான் கடலில் பாய்ந்து நீந்தித் தப்பிக் கொண்டேன்.

மூதூரில் கடந்த 25 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற முஸ்லிம்கள் மூவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டது தொடர்பான மரண விசாரணையின் போது எஸ்.பி. அப்பாஸ் என்பவர் இவ்வாறு சாட்சியம் அளித்தார்.

மூதூர் பதில் நீதிவான் திரு. எம். கே. செல்வராசா மரண விசாரணையை மேற்கொண்டார். விசாரணையின் இறுதியில் மூன்று மரணங்களும் கொலையெனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

ஏநனு மொகமட் நைனு எம். எம். மொஹிதீன், டபிள்யூ ஜே ஜே மொகமட் ஆகிய மூவருமே சுட்டுக் கொலை செய்யப்பட்டவர்களாவர்.

இச்சம்பவத்தின்போது துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த முகதலிப் என்பவர் கடந்த 30 ஆம் திகதி மரணமடைந்துள்ளார்.

மூவரின் மரண விசாரணையின் போது அப்பாஸ் தொடர்ந்து சாட்சியமளித்த போது கூறியதாவது:

25 ஆம் திகதி முற்பகல் 3 மணியளவில் நானும் எனது தம்பியும் காலஞ்சென்ற மூவருமாக மீன் பிடிப்பதற்காகப் படகில் சென்றோம்

நடுநிசி நேரத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த போது ஒரு படகு எங்கள் படகை நோக்கி வந்தது. அதில் மூவர் இருந்தனர். எங்களிடம் வந்து மீன் கேட்டனர்.

அதே வேளை அந்தப் படகிலிருந்த ஒருவர் துவக்கை எடுப்பதைக் கண்டு பயத்தினால் நான் நீரில் குதித்து நீந்தத் தொடங்கினேன் நீந்திக் கொண்டிருந்த போது அடுத்தடுத்து பல வெடிச் சத்தங்கள் கேட்டன

படகில் இருந்தவர்களுக்கு என்ன நடந்தது என்பது எனக்குத் தெரியாது நான் நீந்திப் போய் ஒரு கல்லில் விடியும் வரை இருந்தேன்.

அடுத்த நாள் காலை அங்கு ஒரு படகு வரவே அதன் மூலம் நான் கரைக்கு வந்து சேர்ந்தேன் நடந்தவற்றை உறவினர்களிடம் கூறினேன்.

பின்னர் மூவரின் சடலங்களும் கரை வந்து சேர்ந்தன எனது தம்பியின் சடலம் கண்டு பிடிக்கப்படவில்லை இவ்வாறு அவர் கூறினார். (ஒ-150)

## தபாலகம் மீண்டும் இயங்க கோரி மகஜர்

கொடிகாமம், ஏப் 6

கொடிகாமம் தபாலகம் மிக விரைவில் அதற்கென இப்போது ஒழுங்கு செய்யப்பட்டுள்ள கட்டடத்தில் திறந்து வைக்கப்பட வேண்டும்

கொடிகாமம் வாழ் மக்கள் இப்படிக் கோரி மகஜர்கள் தபாலக மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளன.

தபாலகம் கடந்த சில மாதங்களாக இயங்காமல் உள்ளது. (இ-75)



பொய்யாமொழி

குறள்:

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர்.

பொருள்:

துன்பம் வந்த போது அதற்காக வருந்திக் கலங்காதவர் அந்தத் துன்பத்திற்கே துன்பம் உண்டாக்கி அதை வென்று விடுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
★ தரமானவர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெகட்டிவ் Processing செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச்சுருள்கள்
KODAK - FUJI - KONICA
TUDOR - FORTE - B/W
பெற்றுக்கொள்ள நாடுங்கள்

# உதயன்

06-04-1988 புதன்கிழமை

எம்மிடம் வர்ண நிழற்படப் பிரதிகள் பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள்
போட்டோ அல்பங்கள் இலவசம்
மேலதிக விபரங்களுக்கு:-
**ஆர்த்தி ஜுவல்லர்ஸ்**
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அரிய சந்தர்ப்பம்
**Nursing Training**
**Pharmacist - பயிற்சி**
புதிய வகுப்புகள் ஆரம்பமாகின்றன.
O/L படித்த இருபாலாரும் சேரலாம்
சேர விரும்புவோர் 7-4-88 வியாழக்கிழமை
காலை 9 மணிக்கு நேரில் வரவும்.
**N-A-T-C**
(அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)
(சுதுமலைச் சந்திக்கும் மானிப்பாய் அந்தோனியார் கோவிலுக்கும் இடையில் - எலெக்ற் கல்வி நிலையம் அருகாமையில்)
யாழ்ப்பாணம் வீதி - மானிப்பாய்

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

செல்வன்
**கவாஸ்ஹர் சச்சிதானந்தன்**

புங்குடுதீவு முதலாம் வட்டாரம் சோமசுந்தரம் சச்சிதானந்தன் (G S N) மகாலெட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வன் (கவாஸ்) இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, தாத்தா, அம்மம்மா, சேனுதி பெரியப்பா, பெரியம்மா, G S மாமா, மாமி, U.K சித்தப்பா, சித்தி, ஜேர்மன் பாலா மாமா, மாமி, நவி மாமா, மாமி, சதா, விவே சித்தப்பாமார், கருணா, முருகன் மாமா, தர்மராஜ் மாமா, மாமி, மகேசு மாமா, லெட்சுமி மாமி, மச்சான்மார் மைத்துனிமார் அனைவரும் இரஞ்சி முருகன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். [2752]

பௌதிகவியல்
ஆசிரியர்:- மணியம் (B.sc)
விசேட பிரிவு ஆரம்பம்:
7 - 04 - 1988.
பொறியியல்: Mon, Wed, Thu
10.30 — 12.30
3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
[ஆஸ்பத்திரி வீதுக்கருகாமையில்]

## நீத்தார் பட்டியல்

### திரு. திரவியம் பிலிப்

யாழ்ப்பாணம் 143/2 ஸ்ரான்லி வீதியைச் சேர்ந்த திரவியம் பிலிப் 5 4 88 இல் காலமானார். இவர் மரியம்மா அவர்களின் அன்புக் கணவரும், புஸ்பராணி, யசிந்தா, வெனிற்றா ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் திரு A. E. செல்வராஜா (கச்சேரி, கிளிநொச்சி) திரு A. V. குரைசதஸ் (விவசாயப் பிரிவு, கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்ற அந்தோனிப் பிள்ளை, இராசையா, சின்னராசா ஆகியோரின் சகோதரரும், இதேவான் (ஜேர்மனி) கஜேந்திரன், விஜேந்திரா, அனிற், மிலஸ், கமலினி ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 6 4 88 இன்று காலை 9 மணியளவில் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டப்படுகின்றனர்.

143/2 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம். தகவல்:- S.A கிளஸ்ரன்
(2748)

## தமிழகமிருந்து---

(1-ம் பக்கத் தொடர்ச்சி) சாதர், ஸ்ரீலங்கா இராணுவத்தைச் சேர்ந்த டு ர்ணல லே கான்குணவர்த்தன, சப்டன் குணரத்தின ஆகியோர் நேரடியாகப் பார்வையிட்டனர்.

இந்திய பத்திரிகையாளர்களும், தொலைக்காட்சிப் படப்பிடிப்பாளர்களும் வந்திருந்தனர்.

கப்பலில் வந்திறங்கிய சகலருக்கும் இந்தியசெஞ்சிலுவைச் சங்கத்தினர் பால் கொடுத்து வரவேற்றனர்.

பின்னர் சகலரும் பஸ்கள் மூலம் துறைமுகத்தில் இருந்து நடேஸ்வராக் கல்லூரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நடேஸ்வராக் கல்லூரியில் அகதிகள் அனைவருக்கும் மதிய போசனம் வழங்கப்பட்டது.

பின்னர் அகதிகளுக்கென ஒதுக்கப்பட்ட கருமபீடங்களில் ஒவ்வொருவரும் தங்கள் குடும்பவிவரங்களை பதிவு செய்து கொண்ட பின் விசேட மண்டபங்களில் தங்க வைக்கப்பட்டனர்.

நேற்று வந்து சேர்ந்த அகதிகளுக்குரிய சகல கொடுப்பனவுகளும்வழங்கப்பட்டு அவர்கள் இன்று சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவர். [ஓ-9-10]

## பிறந்த தின வாழ்த்து



**செல்வன் பா காண்டீபன்**

பிறந்ததிகதி: 6-04-87

இணுவிலைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் புஷ்பலதா தம்பதிகளின் செல்வப்புதல்வன்

**"காண்டீபன்"**

தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று (6-4-1988) அவரது இல்லத்தில் கோலாகலமாகக் கொண்டாடுகிறார். அவரை அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பா குடும்பத்தினர், மன்னார் யோகநாதன் மாமா, ஜேர்மனி தருமராசா சித்தப்பா குடும்பத்தினர், கனடா பெரியமாமா லோகநாதன், சின்ன மாமா குணநாதன் ஆகியோர் பரராசசேகரப் பிள்ளையார் திருவருள் பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும்சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள். (2437)

## ரெலோ---

[1-ம் பக்கத் தொடர்ச்சி] யப்படுகிறது.

நல்லூர் யமுனா வீதியைச் சேர்ந்த ஒரு வீட்டிலிருந்து விட்டுத் திரும்புகையிலேயே அவர் இளைஞர் குழு ஒன்றினால் சுடப்பட்டார் எனக் கூறப்பட்டது. (அ-10)

### திருமதி செல்லம்மா அருளம்பலம்

வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் முன்னைநாள் அல்லைப்பிட்டி விதானையார், காலஞ்சென்ற திரு. ஏரம்பு அருளம்பலம் அவர்களின் அன்பு மனைவியுமாகிய செல்லம்மா நேற்று [5-4-88] செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்கள்.

இவர் மகேஸ்வரியம்மா, ஆசிரியை புவனேஸ்வரி, முன்னைநாள் மாவட்ட நீதிபதி கெங்காதரன் (லண்டன்), பராசக்தி, Dr. கமலாதேவி [லண்டன்] ஆகியோரின் பேரன்புத் தாயாரும், வல்லிபுரநாதன் J. P., பென்ஷனியர் சண்முகரத்தினம் பரமேஸ்வரி ஆகியோரின் அன்புசால் சிற்றன்னையும், மனோன்மணி, இராணி பஞ்சாட்சரம், இளைப்பாறிய ஆசிரியர் ஏரம்பு அருணாசலநாயகம், சோமசுந்தரேசன், சிவலட்சுமி [லண்டன்], இளைப்பாறிய தொழில்கேட்டு நீதிபதி குருசாமி, சட்டத்தரணி அருணாசலம் ஆகியோரின் அருமை மாமியாரும், ஏரம்பு தருமலிங்கம் அவர்களின் மைத்துனியும், வீரகத்திப்பிள்ளை, ஆரத்தவாரெற்றவர்களாகிய நமசிவாயம், கிருஷ்ணபிள்ளை, இராசமணி, கமலம்மா, சிவகொழுந்து ஆகியோரின் பெறற்கரிய உடன்பிறப்புமாவார்.

ஈமக்கிரியைகள் இன்று [6—4—88] புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக அல்லைப்பிட்டி மணல்சொரி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
ப. செ அருமைநாயகம்
[2753]

### மரியபிள்ளை அன்னமுத்து

கரம்பொன் ஒழுவில் வீதியைச் சேர்ந்த மரியபிள்ளை அன்னமுத்து காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஜோசப் பொன்னையாப்பிள்ளையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அக்கினேஸ், B J. பயஸ், சிசிலியா, சிங்கராயர், விக்ரர் [சீதுவ], வயலற் ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை, மேபிள், காலஞ்சென்ற இம்மானுவல், மனுவெலா (பண்டத்தரிப்பு), வசந்த [சீதுவ], எட்வேட், [R. A O மட்டக்களப்பு] ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை, காலஞ்சென்ற மரியாம்பிள்ளை, காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை இன்னாசிமுத்து, காலஞ்சென்ற மனுவல் பிள்ளை, காலஞ்சென்ற பொன்னம்மா அந்தோனியாப்பிள்ளை, அருட்செல்வி மேரி எமிலி (திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ்ப்பாணம்), மகாபேன்மைதங்கிய யாழ் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக [7-4-88] வியாழக்கிழமை காலை 8மணிக்கு கரம்பொன் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தகவல்:
யோ. சிங்கராயர்
ஒழுவில் வீதி,
[2755] கரம்பன், ஊர்காவற்றுறை.

ஓம்

## திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்

நிகழும் பிரபவ வருடம் பங்குனி மாதம் 26ஆம் நாள் (8-4-1988) வெள்ளிக்கிழமை காலை 8-25 மணிமுதல் 9-30 மணிவரையுள்ள இடபலக்கின சுபமுகூர்த்த வேளையில்,

| எனது புத்திரன் திருநிறை செல்வன் **லிங்கேஸ்வரன்** (ஈசா) அவர்களுக்கும் | எனது புத்திரி திருநிறை செல்வி **துளசி** (பிருந்தா) அவர்களுக்கும் |
|---|---|

நாவற்குழி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் நிகழவிருக்கும் திருமண வைபவத்தில் தங்களை குடும்பசகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

| திருமதி நா இரகுநாதன் (I. N லிவ ம் அன் சன்ஸ்) 179. நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | திரு திருமதி க அன்னலிங்கம் "பிருந்தாவனம்" நாவற்குழி, கைதடி. |
|---|---|

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## கேள்வி அறிவித்தல்- 1988

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், கடைகள் ஆகியவற்றுக்கான அரசு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 16-04-88 ஆம் திகதி தொடக்கம் 31-12 88 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குக் குத்தகைக்குக் கொடுப்பதற்கு விசேட ஆணையாளர்- வலிகாமம் தெற்கு பிரதேச சபை அவர்களால் 15 - 04 - 88 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பப்பத்திரங்கள் யாவும் குறிப்பிட்ட பிரதேச சபையில் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரால் கேள்வி வைப்புப் பணம், கேள்விப்பத்திரப் பணம் ஆகியன செலுத்துவதன் பேரில் 14-04-88 ஆம் திகதி நண்பகல் 12 00 மணிவரை சபை அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும். மேலதிக விவரங்கள் அறிய விரும்பின் வலி-தெற்கு பிரதேச சபை அலுவலகத்தில் சாதாரண வேலை நாட்களில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 15-04 88 ஆம் திகதி பி. ப. 1-30 மணிக்குத் திறக்கப்படும். தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் கேள்வித் தொகையின் ½ பங்கு பணத்தை உடனடியாகச் செலுத்தி ஒப்பந்தம் கைச்சாத்திடல் வேண்டும்.

ஆ. மகாலிங்கம்,
விசேட ஆணையாளர்,
வலிகாமம் தெற்கு பிரதேச சபை.

வலிதெற்கு பிரதேச சபை,
சுன்னாகம் 31 - 03 - 88

### வலி-தெற்கு பிரதேச சபை - சுன்னாகம் உப அலுவலகம்

| குத்தகையின் தன்மை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | மதிப்பிடப் பட்ட பணம் |
|---|---|---|---|
| 1 உடுவில் சந்தை (கிளிச்சந்தை) | 50/- | 500/- | 5000/ |
| 2 உடுவில் மாட்டிறைச்சிக் கடை (கிளிச்சந்தை) | 50/- | 1000/- | 30,000/- |
| 3 மீ 1 மாட்டிறைச்சிக்கடை (மத்திய சந்தை) | 50/- | 1000/- | 1,50,000/- |
| 4 மீ 3- கருவாட்டுக்கடை | 25/- | 100/- | 1350/- |
| 5 மீ 5 கருவாட்டுக்கடை | 25/- | 100/- | 1500/- |
| 6 மீ 6- கருவாட்டுக்கடை | 25/- | 100/- | 1350/- |
| 7 மீ 7 கருவாட்டுக்கடை | 25/- | 100/- | 1500/- |

### உடுவில் உப அலுவலகம்

| | | | |
|---|---|---|---|
| 1 மருதனார்மடம் சந்தை | 50/- | 1000/- | 30,000/- |
| 2. இணுவில் சந்தை | 50/- | 500/- | 2,000/- |
| 3. தாவடிதெற்குமாட்டிறைச்சிக்கடை | 25/- | 100/- | 7,000/- |

### ஏழாலை உப அலுவலகம்

| | | | |
|---|---|---|---|
| 1. ஏழாலை மத்திய சந்தை | 15/- | 25/- | 25/- |
| 2 ஏழாலை ஆட்டிறைச்சிக்கடை | 25/- | 50/- | 500/- |

## சொந்த---

(1ஆம்பக்கத்தொடர்ச்சி) முகாமை விட்டு வெளியேற அனுமதிக்கப்படவில்லை.

சிலர் இன்னும் சில காலம் தமிழ் நாட்டில் தங்கி யாழ்ப்பாணத்தில் அமைதியான நிர்வாகம் ஏற்பட்டதும் திரும்பிச் செல்ல விரும்புவதாக அங்குள்ள உயரதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

எனினும் அவர்கள் அகதிகளின் கருத்துளதற்கும் செவி சாய்க்காது 'வடபகுதியில் அமைதி ஏற்பட்டுவிட்டது. நீங்கள் அங்கே போய் உங்கள் சொந்த மண்ணில் நிம்மதியாக வாழலாம்' எனக் கூறியே எம்மை அனுப்பி வைத்தனர்— இவ்வாறு அவர் தெரிவித்தார். [அ 10

## கப்பலும்---

(1-ஆம்பக்கத் தொடர்ச்சி) மழையில் நனைந்து போயினா.

இது இவ்வாறிருக்க, நேற்று யாழ் குடாநாட்டின் பல பகுதிகளிலும் நீண்ட கால இடைவெளியின் பின்னர் இடி முழக்கத்துடன் கூடிய மழை பெய்தது. (ஓ-10)

### திருமதி ருக்மணி செல்லையா

அசோக் வாசகம், மடத்துவாசல் ஏழாலையைச் சேர்ந்தவரும் இல 51, 53 மத்திய வீதி, திருகோணமலை அசோகா ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ் உரிமையாளருமான திருமதி ருக்மணி செல்லையா அவர்கள் 4-4-88 இல் காலமானார். இவர் வலலிபுரம் செல்லையாவின் அன்பு மனைவியும் சிவலோகநாதன் (அ ரன் France), சிவலோகநாயகி, திருலோகநாயகி அருள்வதி ஆகியோரின் அன்புத்தாயாரும் திருமதி சிவலோகநாதன்ர திகா (France)வின் அன்புமாமியுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 5-4-88 இல் அவரது வீட்டில் நடைபெற்று பூதவுடல் ஏழாலை குடும்ப மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அசோக் வாசகம், வ செல்லையா
மடத்துவாசல், (கணவர்)
ஏழாலை. (2441)

### திரு. வேலுப்பிள்ளை செல்லப்பா கந்தையா

திரு. வே.செ கந்தையா அவர்கள் திங்கட்கிழமை 04 - 04 - 88 அன்று காலமாகிவிட்டார். இவர் கனகம்மாவின் அன்புக் கணவரும், விவேகானந்தராஜா (Manager Roxy), தர்மகுலராஜா (Saudi Arabia) சிறீஸ்கந்தராஜா, சற்குணநந்தராஜா ஆகியோரின் அன்புத்தகப்பனும், புஸ்பாஞ்சலி, ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனும், பிரியதர்ஷினி, பிரியாஞ்சலி ஆகியோரின் அன்புப்பாட்டனுமாவார். இவரது பூதவுடல் 9/3, பாத்திமா ரோட், கொழும்பு-5 என்ற இல்லத்தில் இருந்து 07-04-88 அன்று கனத்தை மயானத்துக்குத் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

மனைவி, பிள்ளைகள்
(2450) தகவல்: M. சுதாகரன்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் ... யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/3, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 06-04-1988ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 393/3 Navalar Road, Jaffna on Wednesday, 06th April 1988.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org